327.954
நிருநா

EVELYN RUTNAM INSTITUTE
REFERENCE LIBRARY
JAFFNA

FIRST DRAFT

# இந்திய வெளியுறவுக் கொள்கையின் வரலாறு. (1947-1984)

# HISTORY OF INDIAN FOREIGN POLICY (1947-1984)

மு. திருநாவுக்கரசு

EV LYN RUTNAM INSTITUTE * JAFFNA *
419
REFERENCE LIBRARY

யாழ்ப்பாணம்
1984

UNPUBLISHED MATERIAL

## அறிமுகம்

1947ஆம் ஆண்டு முதல் இந்தியா மேற்கொண்ட வெளியுறவுக் கொள்கைப் போக்கினை வரலாறு பூர்வமாக விளக்க முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். காலனித்துவ ஆதிக்கத்தின் கீழிருந்த ஆசிய - ஆபிரிக்க நாடுகள் இரண்டாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து விடுதலையடையத் தொடங்கின. அவ்வாறு விடுதலையடைந்த நாடுகள் தமக்கெனப் புதிதாக வெளியுறவுக் கொள்கையினை வகுக்க முற்பட்டன. இவ்வாறு காலனித்துவத்திலிருந்து விடுதலையடைந்த நாடுகள் விரும்பியோ, விரும்பாமலோ சர்வதேச அரசியற் பிடிக்குள் அகப்பட்டு அதனுள் நின்றே தமது கொள்கையை வகுத்து வருகின்றன. இந்த வகையில் காலனித்துவத்திலிருந்து விடுதலையடைந்ததும், மூன்றும் உலக நாடுகளுள் பெரிய நாடாகவும் விளங்கும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைப் போக்கினை வரலாற்று பூர்வமாக ஆராய்வது பல வகைகளிலும் பயனுள்ளதாகும். இவ்வாய்வானது சர்வதேச அரசியல் நிலைமைகளையும் அதில் இந்திய - அமெரிக்க உறவு வளர முடியாமையினையும், இந்திய சோவியத் உறவு வளர்ச்சியடைந்து வந்தமையினையும், இந்தியா சார்ந்த எல்லைப் பிரச்சனைகள் உட்படப் பல்வேறு பிரச்சினைகளையும் இறுதியில் இந்தியா தன்னைத் தென்னாசியாவில் பிராந்திய வல்லரசாக உறுதிப்படுத்த எடுத்து வரும் நடவடிக்கைகளையும் விளக்க முயல்கின்றது.

இன்று மூன்றும் உலகின் முன்னணி நாடாக இந்தியா விளங்குகின்றது. ஏறக்குறைய 80 கோடி மக்களைக் கொண்ட இந்தியாவின், அரசியல், இராஜ தந்திர நடவடிக்கைகள் உலகின் சமபலப் போக்கினை (Balance of Power ) பாதிக்க வல்லது. அதிலும், குறிப்பாக ஆசியாவிலும், இந்து சமுத்திரப் பிரதேசத்திலும் இந்தியா குறிப்பிடத் தக்க முதன்மையைக் கொண்டுள்ளது. இவ்வாறு இந்தியாவின் முதன்மை முக்கியத்துவப்படு வதற்கு அதன் அமைவிடமும் ஒரு முக்கிய காரணமாகும். ஆசியாவின் உப கண்டம் என அழைக்கப்படும் பரந்த நிலப்பரப்பைக் கொண்ட இந்தியா (32,87,782 ச.கி.மீ) ஆசியாவின் தென் பகுதியில் அமைந்துள்ளது. இது ஆசியாவிற் குழப்பம் நிறைந்த தென் மேற்கு ஆசியாவிற்கும், தென் கிழக்கு ஆசியாவிற்கும் இடையில் அமைந்துள்ளது. தென்கிழக்கு ஆசியாவும், தென்மேற்கு ஆசியாவும் வல்லரசுகளினால் பெரிதும் குழப்பப்

பட்டிருக்கும் பிராந்தியமாகும். தென்கிழக்கு ஆசியாவிலும், தென்மேற்கு ஆசியாவிலும் உள்ள நாடுகள் சிறு சிறு நாடுகளாக அமைந்திருக்க தென்னாசியாவிலுள்ள நாடுகளுள் பெருமளவு நிலப்பரப்பைக் கொண்ட பெரிய நாடாக இந்தியா அமைந்துள்ளது.

பாகிஸ்தான், சீனு, நேப்பாளம், பூட்டான், பங்காளதேஷ் ஆகிய நாடுகளுடன் இந்தியா தனில பிரதேச எல்லைகளைக் கொண்டுள்ளது. இந்தியாவின் வடமேற்கில் பாகிஸ்தான் எல்லை உள்ளது. வடக்கு, வடகிழக்குப் பகுதியில் சீனு, நேப்பாளம், பூட்டான் ஆகிய நாடுகளின் எல்லைகள் உள்ளன. இவ்வெல்லைப் பிராந்தியம் இமயமலைச் சாரலாகும். பங்காளதேஷ் இந்தியாவின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இந்நிலப்பரப்பு எல்லைப் பகுதிகளில் பாகிஸ்தான், சீனு ஆகிய நாடுகளுடன் இந்தியாவிற்கு நேரடிப் பிரச்சினைகள் உள்ளன. இந்தியாவிற்குத் தென்பகுதியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கைத்தீவு அமைந்துள்ளது. இலங்கையுடன் இந்தியா கடல் எல்லைகளைக் கொண்டுள்ளது.

இந்து சமுத்திரத்தைச் சூழவுள்ள நாற்பத்தியேழு நாடுகளுள் இந்தியா முதன்மை நாடாகும். இந்தியா இந்துசமுத்திரத்தின் வட பாகத்தில் 2500 மைல்களுக்கு மேற்பட்ட எல்லையினைக் கொண்டுள்ளது. இவ்வாறு இந்தியாவுடன் சம்பந்தப்படும் இந்து சமுத்திரம் இந்தியா பொறுத்து அதிக முக்கியத்துவத்திற்கு உரியதாகும்.

## இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை
## 1947 - 1984

---

ஆங்கிலேயரின் ஆதிக்கத்திலிருந்து 1947ஆம் ஆண்டு இந்தியா விடுதலையடைந்தது. விடுதலையடைந்த இந்தியா தனக்கென ஒரு வெளிநாட்டுக் கொள்கையை வரைந்து கொண்டது. இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையை முதலில் வரைந்தவர் இந்தியாவின் முதலாவது பிரதமரும், வெளியுறவு அமைச்சருமான ஜவகர்லால் நேரு ஆவார். இந்தியாவின் நிலைமையினையும், சர்வதேச நிலைமைகளையும் முதலில் நோக்கிக் கொண்டு இவற்றின் மத்தியில் நேரு எவ்வாறு வெளியுறவுக் கொள்கையை வகுத்தார் என்பதை நோக்குவதே பொருத்தமானதாகும்.

ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு முன்பு இந்திய உப கண்டம் 500க்கும் மேற்பட்ட சிறு சிறு அரசுகளைக் கொண்ட ஒரு பிராந்தியமாகக் காணப்பட்டது. இப்பிராந்தியத்தை ஆங்கிலேயர் கைப்பற்றியதும் நிர்வாக வசதிக்காகவும், தமது பொருளாதார நலன்களை நோக்கமாகக் கொண்டும் இதனை ஒரே அரசியல், பொருளாதார, நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டு வந்த போதிலும் தமது ஆதிக்கத்தை இங்கு தொடர்ந்து நிலைநாட்டுவதற்காக பிரித்தாளும் கொள்கையின் அடிப்படையில் மக்கள் மத்தியில் வேற்றுமைகளைத் தூண்டி சமூக ரீதியாக இந்திய மக்களைப் பிரித்து வைத்திருப்பதில் பல பிரயத்தனங்களை மேற் கொண்டு வந்தனர். ஆங்கிலேயர் பிரதானமாகத் தமது நலன் கருதியே 1935ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து பர்மாவைப் பிரித்து ஒரு தனியரசமைப்பின் கீழ் கொண்டு வந்தனர். பின்பு 1947ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்தது. இந்த வகையில் நோக்கும் போது சுதந்திர இந்தியாவின் பிரதான பிரச்சினைகளில் ஒன்று தேசிய ஐக்கியமும், பிரதேச ஒருமைப்பாடுமாகும். உலகின் பெரிய நாடுகளாகிய அமெரிக்கா, சோவியத் யூனியன், சீனா போன்ற நாடுகளுடன் இந்தியாவை ஒப்பிடும் போது இம்மூன்று நாடுகளிலும் தேசிய ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு எனும் விடயங்கள் ஒரு பிரதான பிரச்சனையாகப் பெருமளவிற்கு இல்லை. ஆனால் அது இந்தியாவில் இன்றும் ஒரு பிரதான பிரச்சினையாக இருந்து வருகின்றது. பல்வேறு காரணங்களை முன்னிட்டு இந்தியாவின்

தேசிய ஐக்கியத்தையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் குலைப்பதில் வெளிநாட்டுச் சக்திகள் தம்மாலான முயற்சிகளிலீடுபட்டு வருகின்றன. அடுத்து எல்லைப்புறப் பிரச்சினையும் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்ருகவுள்ளது. மேலும், இந்தியா சுதந்திரமடையும் போது ஆயுதபலமற்ற, பின்தங்கிய, ஒரு வறிய நாடாகவே காணப்பட்டது. இவற்றின் மத்தியில் இந்தியாவின் பாதுகாப்பு என்பது மையப் பிரச்சினையாகக் காணப்படுகிறது. எனவே பொதுவாக நோக்குமிடத்து இந்தியாவின் தேசிய ஐக்கியமும், பிரதேச ஒருமைப்பாடும் பற்றிய பிரச்சினை, எல்லைப்புறப் பிரச்சினை, பின்தங்கிய நிலையிலிருந்து பொருளாதார விருத்தியும், விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியும் அடைதல் பற்றிய பிரச்சினை மொத்தமாக இந்தியாவின் பாதுகாப்புப் பற்றிய பிரச்சினை ஆகிய நான்கு அம்சங்களுடனும், மேலும் சர்வதேச அரங்கில் இந்தியாவின் பாத்திரம் ஆகிய அம்சமும் உள்ளடங்கிய ஐந்து அம்சங்களுடனும் சம்பந்தப்பட்ட வகையிலேயே இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை அமைய வேண்டியிருந்தது.

இந்தியாவின் பாதுகாப்பே இந்திய வெளியுறவுக் கொள்கையின் மையப் பிரச்சினை என்பதனல் அதனைச் சற்று விரிவாக இங்கு நோக்க வேண்டும். இந்தியாவைத் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்த ஆங்கிலேயர் வெளியரசுகளிடமிருந்து இந்தியாவைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்புப் பற்றிய மூலோபாயக் கொள்கையொன்றைக் (Defence Strategy) கைக்கொண்டு வந்தனர். அதில் மூன்று அம்சங்கள் அடங்கும்.

1. இந்தியாவின் வடமேற்குப் பகுதியைப் பாதுகாத்தல். (Safeguarding the North-West Frontier of India.
2. இந்திய உப கண்டத்தைச் சூழ்ந்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை வெளி வல்லரசுகளிடம் வீழ்ந்து விடாது தடுத்தல்.
3. இந்து சமுத்திரத்தின் மீதும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதிகளிலும் ஆதிக்கம் செலுத்துதல்;(1) என்பனவாகும். இந்தியாவைப் பாதுகாப்பதென்பதை ஒரு கண்ட முறைமையாகவே (Continental System ) ஆங்கிலேயர் கொண்டனர்.

வரலாறு பூர்வமாக காலத்திற்குக் காலம் இந்தியாவின் மீதான படையெடுப்புகள் இந்தியாவின் வடமேற்கு வழியாகவே இடம் பெற்றுள்ளன. எனவே இந்தியாவின் வடமேற்குப் புறத்தைப் பாதுகாத்தல் என்பது முக்கிய அம்சமாக இடம் பெற்றது.

ஆங்கிலேயர் ஆப்கானிஸ்தானை வடமேற்கே ஓர் யுத்த தடுப்பு வலயமாக கருத்திலெடுத்தனர். ஆனால் சுதந்திர இந்தியாவைப் பொறுத்த வரையில் இந்தியாவின் வடமேற்கில் இருந்த பாகிஸ்தான் ஒரு தனி நாடாக அமைக்கப்பட்டமை சுதந்திர இந்தியாவின் பாதுகாப்புப் பொறுத்த ஒரு புதிய பிரச்சினையாக அமைந்தது. இந்த வகையிலேயே காஷ்மீர் பிரச்சினையின் முக்கியத்துவமும் அடங்கியிருந்தது. ( இது பின்னர் தனியாக ஆராயப்படும். இந்தியாவிற்கு வடக்கே இமயமலை அமைந்திருக்க வடகிழக்கே இருந்த சிறு அரசுகளாகிய சிக்கிம், பூட்டான் போன்றன பிரித்தானியரின் கட்டுப்பாட்டிற்குட்பட்டே இருந்தன. மேலும் வடகிழக்கே திபெத் யுத்தத் தடுப்பு வலயமாக அமைந்திருந்தது. 1911ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் திபெத்தை சீனவிலிருந்து ஒரு தனியரசாகப் பிரிப்பதில் வெற்றி கண்டனர். பின்பு 1950ஆம் ஆண்டு கம்யூனிச சீனு திபெத்தின் மீது மேற்கொண்ட படையெடுப்பின் மூலம் திபெத் சீனவுடன் இணைக்கப்பட்டது. 1962ல் திபெத்தினூடாகவே இந்தியா மீதான சீன படையெடுப்பு இடம் பெற்றதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. பிரித்தானியாவிற்கு இருந்தது போலன்றி, சுதந்திர இந்தியாவிற்கு வடகிழக்கும் ஒரு பிரச்சினைக்குரிய விடயமாகவே அமைந்தது. ( வடகிழக்கேயிருந்த நேபாளம், சிக்கிம், பூட்டான் போன்ற அரசுகளைப் பொறுத்த வரையில் சிக்கிம் இன்று இந்தியாவின் ஒரு மாநிலமாக ஆக்கப்பட்டுள்ளது. பூட்டான் இந்தியாவின் பாதுகாப்புக்குட்பட்ட நாடாகவுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. பிரித்தானியராதிக்கத்தின் கீழ் இந்தியாவின் கிழக்குப் பகுதியாக விளங்கிய வங்காளத்தின் ஒரு பகுதி மேற்கு வங்காளம் (பங்காளதேஷ்) இப்பொழுது இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டு பாகிஸ்தானின் ஒரு பகுதியாக 1947ல் அமைக்கப்பட்டது. இந்த வகையில் கிழக்கேயும் இந்தியாவிற்குப் பாதுகாப்புப் பற்றிய பிரச்சினை எழுந்திருந்தது. மேலும் இந்தியாவிற்குத் தெற்கே இந்தியாவைப் பாதுகாப்பதற்காகவும் இந்து சமுத்திரத்தில் கடலாதிக்கத்தைப் பேணுவதற்குமுரிய நாடாக இலங்கை பிரித்தானியரின் கையில் இருந்தது. இந்த சமுத்திரத்தில் கடலாதிக்கம் செலுத்துவதற்கு ஏடன், சிங்கப்பூர், திருகோணமலை ஆகிய துறைமுகங்களைப் பிரித்தானியர் பெரிதும் கருத்திற் கொண்டிருந்தனர். இரண்டாவது உலக யுத்தத்தின் பொழுது 1942ஆம் ஆண்டு சிங்கப்பூர் ஜப்பானிடம் வீழ்ந்ததும் பிரித்தானியருக்கு திருகோணமலையின் முக்கியத்துவம் அதிகரித்தது. விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியினுல் ஒப்பீட்டு ரீதியில் கடல் வலிமையின் முக்கியத்துவம் இன்று குறைந்திருக்கின்ற போதிலும் இந்தியாவிற்கு

அருகே இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் குறைத்து மதிப்பிடக் கூடியதல்ல. இறுதியாக நோக்குமிடத்து பிரித்தானியரிடம் இந்து சமுத்திரம் மீதான ஆதிக்கமிருந்தது. ஆனால் இந்தியாவிடம் அவ்வாறில்லை. ஆயினும் ஒப்பீட்டு ரீதியில் கடல் வலிமையின் முக்கியத்துவம் இன்று குறைந்துள்ளதென்பதையும் இங்கு கருத்திற் கொள்ள வேண்டும். எவ்வாறுயினும் பிரித்தானியரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது போலன்றி சுதந்திர இந்தியா பாதுகாப்புச் சம்பந்தமான புதிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருந்ததென்பது கவனிக்கத்தக்கது.

இவ்வாறு இந்தியாவின் நிலைமைகள் அமைந்திருந்த போது உலக நிலைமை யாதென்பதையும் ஆராய வேண்டும். இரண்டாம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து, இரு பெரும் வல்லரசுகள் உலகில் முன்னணிக்கு வந்தன. ஒன்று சோவியத் யூனியன். மற்றது ஐக்கிய அமெரிக்க நாடுகள். (அமெரிக்கா ) கருத்துநிலை ரீதியில் சோவியத் யூனியன் கம்யூனிசக் கொள்கையைக் கொண்டும், அமெரிக்கா முதலாளித்துவக் கொள்கையைக் கொண்டும் காணப்பட்டன. எனவே கம்யூனிசக் கொள்கையுள்ள நாடுகள் சோவியத் சார்புடையவையாகவும், கம்யூனிச எதிர்ப்புக் கொள்கையுள்ள நாடுகள் அமெரிக்கா சார்புடையனவாகவும் ஓர் அணியமைப்பு உருவாகத் தொடங்கியது. கம்யூனிச எதிர்ப்பு நாடுகள் என்பதன் பேரில் 1949ஆம் ஆண்டு அமெரிக்கா தலைமையில் நேட்டோ (NATO ) அமைப்பு உருவாகியது. பிராந்திய ரீதியில் தென்கிழக்கு ஆசியாவில் கம்யூனிசத்தை எதிர்ப்பதற்காக 1954ஆம் ஆண்டு (SEATO) என்னும் அமைப்பை அமெரிக்கா உருவாக்கியது. இதன் பின் கம்யூனிசத்தைப் பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்குமென 1955ஆம் ஆண்டு சோவியத் தலைமையில் (WARSAW ) ஒப்பந்த நாடுகள் உருவாகின. 1949ஆம் ஆண்டும், 1955ஆம் ஆண்டும் அணிகளின் அமைப்புகள் உருவாகு முன்பே கொள்கை ரீதியாக 1945ஆம் ஆண்டைத் தொடர்ந்தே இரு பெரும் அரசுகளைத் தலைமையகமாகக் கொண்ட அணிகள் இடம் பெறத் தொடங்கியிருந்தன.

இவ்வாறு உலகம் இரு அணிகளாக உருவாகத் தொடங்கும் நிலையில் இந்தியா இதில் எந்தவொரு அணியையும் சாராத நாடாக இருக்க வேண்டுமென நேரு விரும்பினர். உலகம் இரு அணிகளாக மோதும் போது இந்தியா ஒரு 3வது சக்தியாக நின்று உலக

சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கருதினர். அது அவ்வாறு முடியுமென்றும் அவர் பூரணமாக நம்பினர். இந்தியாவின் பாதுகாப்புப் பற்றி நேரு சரியான கணிப்பீட்டைக் கொண்டிருந்தாரென்று சொல்வதற்கில்லை. இந்த வகையில் விடுதலை பெற்ற இந்தியா பின்வருமாறு தனது வெளிநாட்டுக் கொள்கையை வரைந்து கொண்டது. அதாவது அணி சேராமை, ஏகாதிபத்திய எதிர்ப்பு, குடியேற்றவாத எதிர்ப்பு, விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவு, இனவாத எதிர்ப்பு, உலக சமாதானத்திற்காகவும் வளமிக்க வாழ்வுக்காகவும் உழைத்தல், பஞ்சசீலக் கொள்கையைக் கடைப்பிடித்தல் ஆகியனவாகும்(2) என்பவற்றைக் கொண்டதாய் அமைந்தது. ஆயினும் இங்கு வரலாற்று நடைமுறையை நோக்க வேண்டியது அவசியமாகும்.

அணிசார்வதைப் பொறுத்த வரை இந்தியா சோவியத் பக்கம் சார்வதை விட அமெரிக்கா பக்கமே சாரக் கூடுமென பொதுவாக எதிர்பார்க்கப்பட்டது. ஏனெனில் இந்தியா கம்யூனிசமல்லாத ஒரு நாடு. பொருளாதார ரீதியாக முதலாளித்துவப் பொருளாதார அமைப்பையும், அரசியல் அமைப்பு ரீதியாகப் பிரித்தானிய பாராளுமன்ற முறைமையையும் மேலும் அமெரிக்க அரசியற் திட்டத்திலிருந்து சில தி சிந்தனைகளையும் பெற்ற ஓர் அரசியல் அமைப்பைக் கொண்டுள்ள ஒரு நாடாகவேயிருந்தது. எனவே கருத்துநிலை ரீதியிலும் இயல்பான மன உணர்வு ரீதியிலும் அமெரிக்கா சார்ந்த போக்கே இயல்பாக எழக் கூடியதாயிருந்தது. ஆனல் யதார்த்தம் இங்கு வேறு விதமாய் அமைந்தது. நீண்ட காலமாக விடுதலைப் போராட்டத்திலீடுபட்டு விடுதலையடைந்த இந்தியா, ஏகாதிபத்திய எதிர்ப்பு, காலனித்துவ எதிர்ப்பு, இனவாத எதிர்ப்பு ஆகிய கொள்கைகளைக் கடைப்பிடிக்க முற்பட்டமையால் புதிதாக ஏகாதிபத்தியத்திற்கு தலைமை தாங்க முற்பட்ட அமெரிக்காவுடன் முரண்பாடு எற்படக் கூடியதாய் அமைந்தது. இந்தியாவில் தேசிய முதலாளித்துவம் வளரத் தொடங்கியமையாலும் சர்வதேச ரீதியில் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையை இந்தியா கடைப்பிடித்தமையாலும் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகட்கு இந்தியாவினல் அதிக பயன் ஏற்படக் கூடிய வாய்ப்பிருக்கவில்லை. எனவே இரு பக்க ரீதியாகவும் அமெரிக்க – இந்திய உறவு வளர்ச்சியடைவது சாத்தியமற்றுக் காணப்பட்டது.

அதேவேளை சோவியத் சம்பந்தமான இந்தியாவின் ஆரம்ப நிலைமையை இங்கு நோக்க வேண்டும். ஜவகர்லால் நேரு ஒரு மாக்ஸிஸ்ட் அல்லாது விட்டாலும் இடதுசாரி மனப் போக்குள்ளவர். இவர் ஒரு இயங்கியல் பொருள் முதல் வாதியல்ல. ஆனால் பொருள் முதல் வாதியாவார். (Not a dialectical materialist, but a materialist.) இந்த வகையில் பொருள் முதல் வாதக் கண்ணோட்டத்தில் உலக வரலாற்றைப் பொதுவாகப் பார்வையிட்டவர்.(3) 1927ஆம் ஆண்டு இவர் சோவியத் யூனியனுக்கு ஒரு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு வந்ததும், சோவியத்தின் விரைவான பொருளாதார வளர்ச்சிப் போக்கால் பெரிதும் கவரப்பட்டு, சோஷலிசப் பொருளாதாரத் திட்டமிடலைப் பெரிதும் வியந்தார். சோவியத் குடியேற்ற வாதத்திற்கு எதிராக விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவளித்து வந்ததென்ற வகையில் நேரு சோவியத் எதிர்ப்புணர்வு அற்றவராகக் காணப்பட்டார். எனவே ஒரு புறம் அமெரிக்காவுடனான முரண்பாடும், மறுபுறம் சோவியத் எதிர்ப்புக் கொள்கையின்மையும், இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் கருக் கொள்ளத் தொடங்கின. சர்வதேச ரீதியானதும், பிராந்திய ரீதியானதுமான யதார்த்த நிலைமைகள் என்பன இரு நாடுகளுக்குமிடையேயான உறவின் போக்கைப் பெருமளவு நிர்ணயித்துச் சென்றன.

விடுதலை பெற்ற இந்தியா அயல் நாடொன்றுடன் முதலாவதாக எதிர்கொண்ட பிரச்சினை காஷ்மீர் பிரச்சினையாகும். அதாவது காஷ்மீர் இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்குமிடையே இருந்த ஓர் முடியாட்சி அரசாகும். இந்தியாவின் பாதுகாப்புப் பொறுத்து காஷ்மீர் ஒரு முக்கியமான பகுதியாகும். காஷ்மீரின் பெரும்பான்மை மக்கள் இஸ்லாமியராவர். ஆனால் இதன் மன்னன் இந்து மதத்தைச் சேர்ந்தவன். காஷ்மீர் மன்னன் இந்தியா சார்புடையவராகக் காணப்பட்டார். இந்நிலையில் பாகிஸ்தானுடன் காஷ்மீரை இணைத்துக் கொள்ளும் நோக்கில் பாகிஸ்தான் தனது கெரில்லாக்களை காஷ்மீருக்குள் அனுப்பி வைத்தது. 1948 காஷ்மீர் மன்னன் இந்தியாவிடம் உதவி கோரினான். நேரு இந்திய இராணுவத்தை அனுப்பி வைத்தார். பாகிஸ்தானின் இராணுவத்திடமும், கெரில்லாக்களிடமும் இருந்து காஷ்மீரின் 2/3 பகுதியை இந்திய இராணுவம் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. இப்பிரச்சினையில் பிரித்தானியாவும், அமெரிக்காவும் இந்தியாவை எதிர்த்து பாகிஸ்தானுக்கு ஆதரவளித்தன.

பிரித்தானியாவும், அமெரிக்காவும் இந்தியாவிற்கு ஆதரவளிக்குமென்றே நேரு எதிர்பார்த்தார். ஆனால் இவ்விரு நாடுகளினதும் நடத்தை நேருவிற்கு அதிர்ச்சியளித்தது. காஷ்மீர் பிரச்சினையில் காஷ்மீர் இந்தியாவுடனா அல்லது பாகிஸ்தானுடனா இணைவது என்பது பற்றி தீர்மானிக்க காஷ்மீரில் ஒர் ஒப்பங்கோடல் வாக்கெடுப்பை (Plebiscite ) நடாத்த வேண்டுமென்ற கோரிக்கையை பாகிஸ்தான் ஐக்கிய நாடுகள் சபையில் முன் வைத்தது. சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் விடுதலைப் போராட்டங்களுக்கு உலக அரங்கில் ஆதரவளித்து வந்த நேரு காஷ்மீர் பிரச்சினையில் ஒப்பங்கோடலுக்கு சம்மதித்தார். அதேவேளை நேர்மையான ஒப்பங் கோடல் நடைபெறுவதற்கு முதலில் பாகிஸ்தான் இராணுவம் காஷ்மீரிலிருந்து வாபஸ் பெறப்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். ஆனால் பாகிஸ்தான் முதலில் அவ்வாறு வாபஸ் பெற மறுத்துக் கொண்டிருந்தது. அதேவேளை இப்பிரச்சினையில் அமெரிக்கா பின்வருமாறு திட்டமிட்டது. நேரு ஆசியவாதக் கொள்கையை முன்வைத்து அதனை வளர்க்க முற்பட்டு வருகிறார். அதேவேளை உலக அரங்கில் ஒரு செல்வாக்குள்ள நபராகவும் வளர்ந்து வருகிறார். எனவே, நேருவின் ஆசிய வாதக் கொள்கையை உடைப்பதற்கும், அவரின் செல்வாக்கைக் குறைப்பதற்கும் பாகிஸ்தானை ஒரு கருவியாகப் பாவிக்க அமெரிக்கா எண்ணியது. ஆசிய வாதம் வளருமாயின் மேற்குலகின் ஏகாதிபத்தியத் கொள்கைக்கு பெரிதும் குந்தகம் ஏற்படும். இத்தகைய நோக்கத்தோடு பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுதங்களை வழங்கியது. ஆரம்பத்தில் ஒப்பங்கோடலுக்கு நேரு சம்மதித்திருந்தாராயினும் மேற்படி நிலைமையில் பாகிஸ்தான் இராணுவம் காஷ்மீரிலிருந்து வாபஸ் பெறாமையைக் காரணங் காட்டி ஒப்பங்கோடலை நேரு முற்றாக மறுத்தார்.

கம்யூனிசத்தை எதிர்ப்பதற்கு இராணுவக் கூட்டமைப்புக்களை அமெரிக்கா உருவாக்கி வரவேண்டுமென்ற கருத்தினை 1950 களின் ஆரம்பத்தில் வற்புறுத்துபவராக டல்லஸ் (Dulles ) என்பவர் காணப்பட்டார். இவர் அமெரிக்க ஜனாதிபதி ஐஸ்னோவரின் நிர்வாகத்தில் வெளிநாட்டுச் செயலாளராக இருந்தவர். இந்த வகையில் Southeast Asian Treaty organization, (SEATO - 1954) Central Treaty organization (CENTO - 1959) . . . . . . . . . . . . . . . என்பன உருவாக்கப்பட்டன. இவ்விரண்டு இராணுவக் கூட்டமைப்புகளிலும், பாகிஸ்தான் அங்கம் வகித்தது. இவை இந்தியாவிற்கு பாகிஸ்தான் மீதும், அமெரிக்கா மீதும்

அதிருப்தியையும் சந்தேகத்தையும் உருவாக்கின. 1953 - 1954ம் ஆண்டுகளில் அமெரிக்கா மேலும் அதிகளவு ஆயுதங்களைப் பாகிஸ்தானுக்கு வழங்கியது. 1956ம் ஆண்டு சுயெஸ் கால்வாய் பிரச்சினையில் பாகிஸ்தான் எகிப்திற்கு எதிராகப் பிரித்தானியா, பிரான்ஸ் என்பவற்றின் பக்கம் சார்ந்து நின்றது. கோவாப் பிரச்சினையில் போத்துக்கேய காலனித்துவத்தின் பக்கம் பாகிஸ்தான் சார்ந்திருந்தது. இவ்வாறு பாகிஸ்தான் அரபுத் தேசிய வாதத்திற்கு எதிராகக் கூட மேற்குலகைச் சார்ந்த கொள்கையைக் கடைப்பிடித்திருந்தது. இந்தியா சுயெஸ் கால்வாய்ப் பிரச்சினையில் எகிப்திற்கு சார்பாக இருந்தது. எனவே பாகிஸ்தான் ஏகாதிபத்திய அரசுகளைச் சார்ந்து செயற்பட முற்பட்டதென்பது தெளிவு. 1949ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சீனாவில் கம்யூனிசப் புரட்சி வெற்றி பெற்றது. அதே மாதப் பிற்பகுதியில் நேரு அமெரிக்காவிற்கு விஜயஞ் செய்தார். அப்போது அமெரிக்காவின் வெளிநாட்டுக் காரியதரசியாகவிருந்த டீன் அக்கின்சன் (Dean Achinsan.) என்பவர் பின்வருமாறு தனது திட்டத்தை நேருவிடம் வெளியிட்டார். அதாவது இந்தியா கம்யூனிச சீனாவை அங்கீகரிக்கக் கூடாதென்றும், இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து கம்யூனிசத்திற்கு எதிராக செயற்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.(4) ஆனால் நேரு கம்யூனிச சீனாவை தான் அங்கீகரிக்கப் போவதாகக் கூறினார். இதனால் அமெரிக்காவின் இத்திட்டம் இங்கு ஈடேறவில்லை. இவ்விஜயத்தின் போது அமெரிக்காவிற்கும், இந்தியாவிற்கும் இடையில் இன்னொரு முரண்பாடும் இடம் பெற்றது. அதாவது வியட்நாமில் பிரான்ஸ் நிலை கொண்டிருப்பதை நேரு எதிர்த்தார். இதில் அமெரிக்கா பிரான்சுக்கு ஆதரவாக இருந்தது. நேருவின் விஜயத்தை அமெரிக்கா சகல வகைகளிலும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள எண்ணியிருந்ததற்கு மாறாகவே அது அமைந்தது. இங்கு இரு அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டியவையாகும். ஒன்று கம்யூனிச எதிர்ப்பு ஜனநாயகம் என்பதன் பேரில் ஆசிய மண்ணில் அணி திரட்டும் அமெரிக்காவின் கொள்கையை நேரு நிராகரித்தார். அத்துடன் இந்தியாவை சீனாவிற்கெதிராகப் பயன்படுத்தும், மோத விடும் அமெரிக்காவின் திட்டத்தை நிராகரித்தார். நேரு சீனாவை அங்கீகரித்ததுடன் சீனாவிற்கு ஐக்கிய நாடுகள் சபையில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று வாதாடினார். சீனாவிற்காக உலக அரங்கில் இந்தியா குரலெழுப்பி வந்தது. சீனாவிற்காகக் குரலெழுப்பி வந்த கம்யூனிசமல்லாத ஒரு பெரிய நாடு இந்தியா என்பது

குறிப்பிடத்தக்கது. நேரு சர்வதேச அரங்கில் சில முக்கியமான நடவடிக்கைகளை மேற் கொண்டார். 1947ம் ஆண்டு புதுடில்லியில் முதலாவது ஆசிய நட்புறவு மாநாட்டை (First Asian Relation Conference ) கூட்டுவதற்கு முன்னின்று உழைத்தார். மேலும் 1955ம் ஆண்டு Bandung இல் இடம் பெற்ற Afro-Asian மாநாட்டைக் கூட்டுவதிலும் முன்னின்று உழைத்தார். ஆசிய வாதத்தையும் கடந்து ஆசிய-ஆபிரிக்க வாதப் போக்கை, அதாவது மேற்குலகின் காலனித்துவத்திற்கு எதிரான ஆசிய-ஆபிரிக்க ஐக்கியத்தை உருவாக்க விரும்பினர். இம்மாநாட்டிற்கு சீனப் பிரதமர் சூ-என்-லாய் வரவழைக்கப்பட்டார். நேரு சீனவுடன் நட்புறவு பாராட்டினர். சர்வ தேச அரங்கில் சீனவிற்குரிய அந்தஸ்து அளிக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தினர்.

கொரியப் பிரச்சினையில் (1951) வட கொரியர்களின் செயல் (கம்யூனிஸ்ட்) தென் கொரியா மீதான ஆக்கிரமிப்பென்று ஆரம்பத்தில் நேரு கருதிய போதிலும் பின்பு வட கொரியாவிற்கு ஆதரவானர். கம்யூனிச சீனவிற்கு ஆதரவாக குரல் எழுப்பினர். காலனித்துவத்திற்கு எதிராக விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவளித்தார் என்பது போன்ற காரணங்களினல் கம்யூனிச நாடுகளின் போக்கிற்கும் பாதகமற்றவராகக் காணப் பட்டார். இதனல் அமெரிக்கா பக்கம் இருப்பதை விட கம்யூனிச நாடுகள் பக்கம் இந்தியாவின் உறவு சுமுகமானதாகக் காணப்பட்டது.

ஆசியவாதத்திற்கு சீனவும் ஓர் அத்திவாரக் கல்லென நேரு நம்பினர். 1954ம் ஆண்டு ஏப்ரல் மாதம் சீனவிற்கும், இந்தியாவிற்கும் இடையில் நேருவின் பஞ்சசீலக் கொள்கையை ஏற்றுக் கொண்டு ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. பரஸ்பரம் ஆக்கிரமிப் பின்மை, சமாதானச் சகவாழ்வு என்பன அவ் ஐந்தில் இரண்டு அம்சங்களாகும். திபெத்தின் மீது படையெடுத்த சீன திபெத்தைத் தன்னுடன் இணைத்துக் கொண்டமையை இந்தியா அங்கீகரித்தது. மேலும் 1955ம் ஆண்டு பெப்ரவரி மாதம் இந்தியாவில் கனரக இரும்புருக்குத் தொழிற்சாலையை தீர்மானிக்க உதவுவதாக சோவியத் ஒன்றியம் ஒப்பந்தம் செய்து கொண்டது. 1955 யூன் மாதம் நேரு சோவியத்திற்கு விஜயம் செய்தார். சோவியத்தில் நேருவுக்கு சிறப்பாக வரவேற்பளிக்கப்பட்டது. 1955 நவம்பர் - டிசம்பரில் புல்கானின் குருஉ்சேவ் ஆகிய இரு சோவியத் தலைவர்களும் (முதலாவது நபர்

சோவியத் பிரதமர், 2வது நபர் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர்) இந்தியாவிற்கு விஜயஞ் செய்தனர். காஷ்மீர் பிரச்சினையிலும், போத்துக்கேய கால னித்துவத்திற்கு எதிரான கோவாப் பிரச்சினையிலும் சோவியத் இந்தியாவிற்கு ஆதரவளி த்தது. இந்த வகையில் இரு கம்யூனிச நாடுகளுடனும் இந்தியாவிற்கு சுமூக உறவிருந்தது. இதனால் இந்தியா கம்யூனிசத்தின் பக்கம் சாய்கின்றதென அமெரிக்கா குறை கூறி வந்தது.

இக்காலத்தில் இந்தியாவைச் சூழவுள்ள நாடுகளின் நிலைமை பின்வருமாறு இருந்தது. இந்திய - சீன உறவு பாதகமற்றுக் காணப்பட்டது. இந்தியா சீனவுடன் நட்புரிமை பாராட்டியது. சீனவிற்கும் சோவியத் ஒன்றியத்திற்குமிடையே நட்புரிமை பாராட்டியது. சீனவிற்கும் சோவியத் ஒன்றியத்திற்கும் இடையே நல்லுறவு நிலவியது. எனவே இந்தியாவிற்கும் கம்யூனிச அரசுகட்குமிடையே பிரச்சினைகள் நிலவவில்லை. இந்திய - பாகிஸ்தானிய உறவு பகைமையுள்ளதாக இருந்தது. பாகிஸ்தானுக்கும் அமெ ரிக்காவிற்குமிடையே கணிசமான நல்லுறவு நிலவியது. இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் மத்தியில் மனக் கசப்புகள் மத்தியில் சாதாரண உறவு நிலவியது. மேற்கூறிய நாடுகளி டையேயான உறவுகளை நோக்கும் போது இக்கால கட்டத்தில் (1950கள்) இந்தியா விற்கு மிக நல்லுறவு என்று ஒரு நாடும் இருக்கவில்லை. இதே வேளை இந்தியாவிற்குப் பகைமை நாடு இருந்தது. (பாகிஸ்தான்)

1960 களின் ஆரம்பத்திலிருந்து சர்வதேச ரீதியாகவும், இந்தியாவைச் சூழ்ந்தும் வெளிநாட்டுக் கொள்கைப் போக்கில் அடிப்படை மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. 1959ம் ஆண்டு சீன இந்திய எல்லைத் தகராறு ஆரம்பமாகியது. 1960ல் இரு பெரும் கம்யூனிச நாடுகளான சோவியத்திற்கும், சீனவிற்குமிடையேயான உறவு முறிந்தது. 1962ல் சீன - இந்திய எல்லைப் போர் இடம் பெற்றது. இவ்வாறான சம்பவங்களால் அடிப்படை மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. இச்சர்வதேச ரீதியிலான அடிப்படை மாற்றம் கம்யூனிச நாடுகளின் பக்கமிருந்தே உருவாகியது.

எனவே சர்வதேச ரீதியில் பாதிப்பை ஏற்படுத்திய இம்மாற்றப் போக்கைச் சற்று ஆராய வேண்டும். 1953ல் ஸ்ரலின் மரணமடைந்த தீவிலிருந்து 1964 வரை சோவியத்தில் மூன்று தடவைகள் தலைமை மாற்றம் ஏற்பட்டது. இத்தலைவர்களானேர்

முறையே மலென்கோ(Melancouf) புல்கனின்(Bulganin) குருஉஷ்சேவ் என்போராவர். இதை விட உள்ளே பல மாற்றங்கள் இடம் பெற்றன. இம்மூவருள் முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தியவர் குருஷேவ் ஆவார். இவர் புரட்சிகள், போராட்டங்கள் ஆகியவற்றிற்கு சோவியத் காட்டி வரும் நேரடி ஆதரவுகளைக் குறைக்க விரும்பினர். வெளிநாட்டு உறவில் சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டை(Coexistence theory) முன் வைத்தார். இவர் தலைமைக்கு வந்ததும் முதலாளித்துவ நாடுகட்கு விஜயஞ் செய்தார். 1955ல் இவர் இந்தியா, பர்மா, பிரித்தானியா போன்ற நாடுகட்கும், 1959ம் ஆண்டு அமெரிக்காவுக்கும், 1960ம் ஆண்டு இந்தோனேசியா போன்ற நாடுகட்கும் விஜயம் செய்தமை குறிப்பிடத்தக்கது. ஸ்ரலின் ஈரான் தவிர இவ்வாறன விஜயங்களை மேற்கொண்டிருக்கவில்லை.

குருஷேவின் சமாதானச் சகவாழ்வுக் கோட்பாட்டை 1960ல் சீன கண்டித்தது. இத்துடன் சீன - சோவியத் உறவு முறிவடைந்தது. சோவியத் ஒன்றியம் தான் சீனவிற்கு உதவியளித்து வந்த திட்ட வேலைகளை இடைநிறுத்தம் செய்தது. சோவியத்தின் நிபுணர்கள், ஆலோசகர்கள் ஆகியோர் சீனவிலிருந்து 1960ல் திருப்பியழைக்கப்பட்டனர். இரு பெரும் கம்யூனிச நாடுகளுக்கிடையே ஏற்பட்ட பிளவு சர்வதேச ரீதியாகக் கம்யூனிசம் என்பதன் பேரில் சித்தாந்த ரீதியான அணிசேர்வு தோல்வியில் முடிந்ததைக் குறித்து நிற்கின்றது. ஆனல் சோவியத் அமெரிக்கா ரீதியான அணியமைப்பு உடையவில்லை. ஆனல் கம்யூனிச நாடு, கம்யூனிசமல்லாத நாடு என்ற ரீதியிலான உறவு முறை தளர்ந்த ஓர் புதிய சேர்க்கை மாற்றம், இரு அணிகளுக்கிடையே ஏற்படத் தொடங்கியது. இம்மாற்றப் போக்கு சோவியத் - இந்திய நல்லுறவு ஏற்படுவதற்கான வாய்ப்பாய் அமைந்தது.

1955ம் ஆண்டு சோவியத் தலைவர்கள் இந்தியாவிற்கு மேற்கொண்ட விஜயம் இந்தியாவிற்கு மட்டுமுரிய ஒரு சிறப்பு விஜயமல்ல. இக்கால கட்டத்தில் இத்தலைவர்கள் வேறு பல முதலாளித்துவ நாடுகட்கும் விஜயம் செய்திருந்தார்கள் என்பது மேலே அவதானிக்கப்பட்டதே. எனவே சோவியத்தின் வெளிநாட்டுக் கொள்கைப் போக்கில் ஏற்பட்ட பொது மாற்றத்தின் ஓர் அம்சமாக முன்பிருந்ததை விடச் சற்று அதிகமான உறவுப் போக்கை இந்தியாவுடன் சோவியத் கைக்கொள்ள முற்பட்டது. ஆனல் 1960ன் பின் ஏற்பட்ட மாற்றங்கள் தான் இந்திய சோவியத் உறவை வலுவடையச் செய்தன.

சீன இந்தியப் பிரச்சினையின் தோற்றத்தினையும், 1962ம் ஆண்டு சீன-இந்திய யுத்தத்தையும் சற்று நோக்குவோம். 1954 யூலை மாதம் எல்லைப் புறத்தில் பராகோட்டி எனும் பிரதேசம் சம்மந்தமாக இந்தியாவிற்கும் சீனவிற்குமிடையே ஒரு சிறு பிரச்சினை உருவாகியது. ஆயினும் இந்திய சீன உறவில் பாதிப்பேற்படவில்லை. 1959 ஜனவரியில் சீனப் பிரதமர் பின்வருமாறு நேருவுக்கு அறிவித்தார். "சீன இந்திய எல்லை உரிய முறையில் ஒரு போதும் நிர்ணயம் செய்யப்படவில்லை. சீனவின் திபெத் பிரதேசத்திற்கு எதிராகப் பிரித்தானியர் கடைப்பிடித்த ஆக்கிரமிப்புக் கொள்கையின் விளைவே மக்மோகன் (MacMohan) எல்லைக் கோடாகும். இந்த எல்லைக் கோட்டை சட்டபூர்வமானதாகக் கருத முடியாது"(5) எனக் குறிப்பிட்டார்.

இவ்வாறு எல்லைப் பிரச்சினை அமைந்திருக்கையில் திபெத் சம்மந்தமான பிரச்சினையும், சீன இந்திய உறவைப் பாதித்தது. திபெத் இந்தியாவிற்கு வடகிழக்கே ஒரு யுத்தத் தடுப்பு வலயமாக விளங்கியது. 1911ம் ஆண்டு ஆங்கிலேயர் சீனவிலிருந்து திபெத்தை ஒரு தனி நாடாகப் பிரித்து விடுவதில் வெற்றி கண்டனர். சீனவிலிருந்து தீபெத் பிரிக்கப்பட்டமையால் ஒப்பீட்டு ரீதியில் இந்தியாவின் பாதுகாப்பு ஒரு படி உயர்ந்திருந்தது. 1949 ஒக்ரோபர் மாதம் சீனவில் கம்யூனிசப் புரட்சி வெற்றியளித்ததும் 1950 ஒக்ரோபரில் கம்யூனிச சீன தீபெத்தின் மீது படையெடுத்தது. இதன் மூலம் 1951ம் ஆண்டு தீபெத் சீனவின் மாநிலமாக இணைக்கப்பட்டது. பிரதேச சுயாட்சி அடிப்படையில் தீபெத் சீனவுடன் இணைக்கப்படுவதை நேரு எதிர்க்கவில்லை. 1954ம் ஆண்டு சீனப் பிரதமர் சூ-என்-லாய் இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த போது நேரு இதனை அங்கீகரித்திருந்தார். 1959ம் ஆண்டு மார்ச் மாதம் தீபெத்தில் கம்யூனிச சீன ஆட்சிக்கெதிராக கிளர்ச்சி ஏற்பட்டது. சீன இராணுவம் பெருமளவில் தீபெத்தினுட் பிரவேசித்து கிளர்ச்சியை அடக்கியது. தீபெத்தின் பிரதேச சுயாட்சி உரிமை பெருமளவு பறிக்கப்பட்டது. கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கிய 14வது தலாய் லாமா (Dalai Lama) தனது மந்திரிகள், மற்றும் சகாக்களுடன் தீபெத்தை விட்டு வெளியேறி இந்தியாவிற்குள் தஞ்சம் புகுந்தார். இந்திய அரசும் அவர்கட்குப் புகலிடம் அளித்தது. 1959 எப்ரலில் ஏறக்குறைய ஒர் இலட்சம் தீபெத்தியர்கள் தீபெத்தை விட்டு வெளியேறி நேபாளத்திற்குள்ளும், இந்தியாவிற்குள்ளும் தஞ்சம் புகுந்தனர்.

இவ்வாறு தீபெத்திலிருந்து இந்தியா வந்து சேர்ந்தவர்கள் இந்தியாவில் கெரில்லாப் பயிற்சிகளில் ஈடுபட்டனர். இந்தியா தீபெத்தின் பிரதேச சுயாட்சியை வற்புறுத்தியது. இந்தியாவின் இந்நடவடிக்கைகளை சீனா கண்டித்தது. இந்த வகையில் சீன இந்திய உறவு மேலும் மோசமடைந்தது. மக்மோகன் எல்லைக் கோட்டை (Mec Mohan ) சீனா அங்கீகரிக்கவில்லையென சீனப் பிரதமர் இந்தியப் பிரதமருக்கு 1959 ஜனவரியில் அறிவித்திருந்தார் என்பது மேலே குறிப்பிடப்பட்டது. இவ் எல்லைப் பிரச்சினை சம்மந்தமாக 1962 ஒக்டோபர் 20ம் திகதி சீனா இந்தியாவிற்கெதிராகப் படையெடுத்தது. இந்தியாவிற்கு வடகிழக்கே மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பால் 100 மைல் வரை சீனா முன்னேறியது. பின்பு 1962 நவம்பர் 21ம் திகதி தான் கைப்பற்றிய பகுதியிலிருந்து ஒரு பகுதியை சீனா வாபஸ் வாங்கிக் கொண்டது. இவ்வாறு கைப்பற்றப்பட்டு சீனாவுடன் இணைக்கப்பட்ட பிரதேசம் 14,000 சதுர மைல்களாகும்.

சீன இந்திய யுத்தமேற்பட்டதும் இந்தியா அமெரிக்காவிடமும், பிரித்தானியாவிடமும் ஆயுத உதவி கோரியது. அமெரிக்கா 70 மில்லியன் பெறுமதியான இராணுவத் தளபாடங்களை இந்தியாவிற்கு வழங்கியது. இந்த யுத்தத்தில் சோவியத் சீனாவிற்கு எதிராக செயற்படவில்லை. 1960ல் சீன சோவியத் உறவு முறிவடைந்த பின் சோவியத் ஒரு புதிய உறவைத் தேடிக் கொண்டிருந்த கட்டம். எனவே இதில் அவசரப்பட்டு சோவியத் ஒரு முடிவுக்கும் வராமல் நிலைமைகளைச் சற்று அவதானித்துக் கொண்டிருப்பதையே பெரிதும் கைக்கொண்டது எனலாம். இப்பேரில் அமெரிக்காவின் நோக்கமும் அவதானிக்கத்தக்கது. இங்கு அமெரிக்கா இரண்டு நோக்கங்களை மனதிற் கொண்டு இந்தியாவிற்கு ஆயுத உதவி செய்தது. அதாவது யுத்தத்தை நீடிப்பதற்கும், அதேவேளை பரீட்சார்த்த நோக்கத்தோடும் ஆயுத உதவி செய்தது. இந்தியாவிற்கு போதியளவு உதவிகளை அமெரிக்கா செய்யவில்லை. ஏனெனில் இந்தியாவிற்கு எப்படியொரு அனுபவமேற்படுவதை அமெரிக்கா விரும்பியது.

சீன – இந்திய யுத்தத்தில் இந்தியாவிற்கேற்பட்ட பெரும் தோல்வி இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் அடிப்படை மாற்றம் ஏற்படக் காரணமாகியது. இக்காலத்தில் இந்திய இராணுவம் மிகவும் பலவீனமான நிலையிலேயே இருந்தது. இந்தியாவின் இராணுவ நிலைமையைப் பற்றி அப்போது உள்துறை அமைச்சராகவிருந்த லால் பகதூர்

சாஸ்திரி குறிப்பிட்டிருந்தமை இங்கு கவனிக்கத்தக்கது. " இந்திய இராணுவத்திடம் போதியளவு ஆயுதங்களிருக்கவில்லை. போதிய பயிற்சி இருக்கவில்லை. குளிரைத் தாங்குவதற்கேற்ற உடை கூட இருக்கவில்லை "(6) என்று குறிப்பிட்டார். நேருவின் கொள்கையைப் பற்றி இந்தியாவின் அப்போதைய தளபதி பின்வருமாறு விமர்சித்தார். " ஆயுதமற்ற சமாதானமென்பது இசைக் கருவியற்ற இசை போன்றது "(7) என்றார்.

கெடுபிடி யுத்தப் போக்குக்குள் ( Cold War ) அகப்படாமல் இந்தியா ஒரு மூன்றாவது சக்தியாக நின்று செயற்பட வேண்டுமென்று நேரு கனவு கண்டார். ஆனால் சர்வதேச ரீதியானதும், பிராந்திய ரீதியானதுமான யதார்த்த நிலைமை இந்தியாவையும் கெடுபிடி யுத்தப் போக்கிலிருந்து விடுபட முடியாமல் செய்தது. சர்வதேச ரீதியான கெடுபிடி யுத்தக் கட்டமைப்புக்குள் இந்தியா ஒரு பிராந்திய ரீதியான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிப்பதே அவசியமாயிருந்தது.

பாதுகாப்பு, விஞ்ஞான, தொழினுட்ப வளர்ச்சி ஆகிய தேவைகளைக் கருத்திற் கொண்டு அதற்கேற்ப வெளிநாட்டுக் கொள்கை வகுப்பில் ஒரு புதிய தேடலை இந்தியா மேற்கொண்டது. சோவியத்தைச் சார்ந்த போக்கே தருக்க ரீதியாக, படிமுறையாக உருவாகுவது சாத்தியமானது. 1962ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் சோவியத் இந்தியாவிற்கு MiG -21 ரக விமானங்களை விநியோகிப்பதாகவும், அவ்விமானங்களை இந்தியா உற்பத்தி செய்வதற்கான உதவிகளைச் செய்வதெனவும் ஒப்பந்தம் கைச்சாத்தாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. சீன - சோவியத் உறவு மேலும், மேலும் விரிவடைவதாகவே இருந்தது. சீனா 1964ல் அணுப் பரிசோதனையில் ஈடுபட்டது. சோவியத்திற்கு அருகிலுள்ள சீனா சோவியத்திற்கு சவாலாய் இருக்குமெனக் கருதிய சோவியத், சீனாவிற்குப் பகை நாடாக விளங்கிய இந்தியாவுடன் உறவை அதிகரிக்க எண்ணியது. 1964 மே மாதம் சோவியத் இந்தியாவிற்கு 30 மில்லியன் டொலர் பெறுமதியான இராணுவ உதவிகளை வழங்கியது. அதே ஆண்டு செப்ரெம்பர் மாதம் 140 மில். டொலர் பெறுமதியான நீர்மூழ்கிக் கப்பல்களையும் MiG-21 ரக விமானங்கள் 44 ஐயும், தரையிலிருந்து வானத்திற்கான 50 ஏவுகணைகளையும், 70 இலகு தாங்கிகளையும் ( Light Tangs ) வழங்கியது.

சீன - இந்திய யுத்தத்தைத் தொடர்ந்து சீனாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவு வளரத் தொடங்கியது. இந்திய - பாகிஸ்தான் பிரச்சினை, சீன - பாகிஸ்தான் உறவு வளர்ச்சியடைந்தமை என்பன சம்மந்தமாக சோவியத் பின்வருமாறு சிந்தித்தது. இந்திய உப கண்டத்தில் இந்நாடுகளும், (இந்தியா, பாகிஸ்தான் ) மோதுண்டால் சீனாவிற்கு எதிரான பலச்சமன்பாட்டு நிலையை இந்தியா பேண முடியாதேற்படலாம். எனவே சீனாவிற்கு எதிராக சமபல நிலையை உருவாக்குவதற்கு இந்திய உபகண்டத்திலுள்ள இரு நாடுகளும் சமாதானமாக இருக்க வேண்டுமென சோவியத் விரும்பியது. சோவியத் கோணத்தில் இப்பிரச்சினை பற்றிய இரண்டாவது அம்சம் என்னவெனில் பாகிஸ்தான் சீனாவுடன் உறவை வளர்க்கும் போது அது சீனாவைப் பலப்படுத்துவதாகவும் மொத்தத்தில் சோவியத்தைப் பாதிக்கக் கூடியதாகவும் அமைந்து விடும். இச்சூழ்நிலையில் பாகிஸ்தானுடன் சோவியத் பகைமையை வளர்க்கக் கூடாதெனவும், சோவியத் சிந்தித்தது. 1965ல் மார்ச்சில் பாகிஸ்தானின் ஜனாதிபதி அயூப்கான் சீனாவிற்கு விஜயத்தை மேற்கொண்டதும், சோவியத் ஏப்ரல் மாதம் அயூப்கானை மொஸ்கோவிற்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னணியில் தான் 1965ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இந்திய - பாகிஸ்தான் யுத்தம் ஏற்பட்டதும், சோவியத் இப்பிரச்சினையில் இரு நாடுகட்கிடையேயும் சமாதானத்தை ஏற்படுத்தி வைக்க முற்பட்டது. பாகிஸ்தானிய ஜனாதிபதி அயூப்கானுக்கும் - இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரிக்கும் இடையிலான பேச்சு வார்த்தைகள் சோவியத்திலுள்ள தாஷ்கென்ற் (Thaskend ) என்னும் இடத்தில் இடம் பெற்றது. இச்சமாதானப் பேச்சு வார்த்தைகளின் போது (1966 ஜனவரி) சோவியத் பிரதமர் கொசிஜின் (Kosygin ) சோவியத் வெளிநாட்டமைச்சர் குரோமிக்கோவ் (Gromycov ) பாதுகாப்பமைச்சர் மலினொவ்ஸ்கி (Malinovsky ) ஆகியோர் பிரசன்னமாயிருந்தனர் என்பது இப்பேச்சு வார்த்தைக்கு சோவியத் கொடுத்த முக்கியத்துவத்தை விளக்குகின்றது. பேச்சு வார்த்தை முடிவடைந்ததும் அது பற்றிக் குறிப்பிடுகையில் பிரதமர் கொசிஜின் "ஆழ்ந்த திருப்தி (Profound satisfaction )" (8) என்று குறிப்பிட்டார். மேலும் பேச்சுவார்த்தை பற்றிய சோவியத்தின் முயற்சியை கொசிஜின் பின்வருமாறு குறிப்பிட்டார். "இந்நாடுகள் மீதுள்ள நட்புணர்வினாலும்,

சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற பேரவாவினாலும் உந்தப்பட்டு சோவியத் இத்த கைய பேச்சுவார்த்தையை ஏற்படுத்த உழைத்தது."(9)

இந்திய - பாகிஸ்தான் போரைத் தொடர்ந்து (1965) பாகிஸ்தான் சீனாவிடம் அதிகளவு ஆயுத உதவிகளைப் பெறத் தொடங்கியது. சீனாவுடன் பாகிஸ்தானின் உறவு அதிகம் வளராமற் தடுப்பதற்காகவும், சோவியத்திற்கு பகைமை அரசாக பாகிஸ்தான் மாறாமல் இருப்பதற்காகவும் சோவியத் பாகிஸ்தானுடன் இராணுவ ரீதியான உறவுகளை வைத்துக் கொள்ள முற்பட்டது. 1967 யுன் 27 தொடக்கம், யூலை 8 வரை பாகிஸ் தானிய தளபதி ஏ.எம் யக்கா சோவியத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டார். இவ்விஜயத்தின் போது சோவியத் பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி செய்வதாக ஒப்புக் கொண்டது. உடனடியாகவே இதற்கெதிரான கண்டனர்கள் இந்தியாவில் உருவாகின. 1967 யூலை 9ம் திகதி பிரதமர் இந்திராகாந்தி இது பற்றிக் குறிப்பிடுகையில் "சோவி யத் சம்மந்தமாக இந்தியாவின் கொள்கைகளில் மாற்றமெதுவும் இருக்காது. ஆயினும் சோவியத்தின் தீர்மானம் எங்களுக்கு மகிழ்ச்சியளிக்கவில்லை."(10) என்றார். மேலும் லோக்சபாவிற்கு பேசுகையில் பிரதமர் இந்திரா கூறியதாவது கருத்துநிலை வேறுபாடுக ளையும் கருத்தில் எடுத்துக் கொள்ளாது சோவியத் யூனியன் உறவுகளைப் பெருக்கிக் கொள்ள முயற்சிக்கிறது.(11)

இப்பிரச்சினையை ஆராய்வதற்கு இந்திய மந்திரி சபையின் சர்வதேச விவகாரக் குழு உடனடியாகக் கூடியது. அக்கூட்டத்தில் சோவியத்தின் போக்குக்கு பெரும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. சோவியத்தின் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக சோவியத்திற்கு மேற்கொள்ள தீர்மானித்திருந்த இந்திய ஜனாதிபதி சையிஸின் விஜயத்தை ரத்துச் செய்து விடுமாறு ஒரு பிரேரணை முன் வைக்கப்பட்டது. இராஜ தந்திர நோக்கம் கருதி இத்தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. லோக்சபாவிற்கு முன்னால் 3000 பேர் வரை சோவியத் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் சோவியத் தூதரக தகவற் பிரிவுக்கு முன்னால் 700 பேர் வரையில் சோவியத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டத்தின் போது 400 பேர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் நால்வர் எம்.பிக்கள், ஒருவர்

புதுடில்லி உதவி மேயர்.[12] இவ்வாறு பாகிஸ்தானுக்கு சோவியத் இராணுவ உதவி செய்ய முற்பட்டதும், இந்தியாவில் சோவியத் எதிர்ப்பு உருவாகத் தொடங்கியது.

சோவியத் சமபலக் கொள்கையைப் பேணுவதற்குத் தென்னாசியாவிற் தெரிவு செய்திருக்கும் நாடு பாகிஸ்தானை விட இந்தியா தான். எனவே இந்தியாவை இழக்க சோவியத் விரும்பாது. பாகிஸ்தானைப் பகைக்காமல் இருப்பது நீண்ட காலத்தில் சில பிரச்சினைகளைக் கையாளச் சோவியத்திற்கு வாய்ப்பாக இருக்கும். ஆனால் இந்தியாவில் சோவியத் எதிர்ப்பு உருவாகுவது நீண்ட காலத்திலும், உடனடியாகவும் சோவியத்திற்குப் பாதகமானது. எனவே நெருக்கடியின் மத்தியில் இரண்டையும் சார முடியாது. எனவே ஒப்பீட்டு ரீதியாக இந்தியாவைச் சார வேண்டிய அவசியம் சோவியத்திற்கு ஏற்பட்டது.

இப்பிரச்சினையில் சோவியத் பாகிஸ்தானிய உறவை வளர விடாமல் தடுப்பதற்கு பாகிஸ்தானைப் பலமற்ற நிலையில் இருக்க வைப்பதற்கு இந்தியா அமுக்கத் தந்திரத்தை (Pressure tactics )[13] கையாள்கிறது என்று இந்தியா மீது பாகிஸ்தான் குறை கூறியது. எப்படியிருந்த போதிலும் சோவியத்தின் நலனைப் பொறுத்த வரையில் அது இந்தியாவின் அமுக்கத்திற்கு (Pressure ) உட்பட்டுப் போக வேண்டுமென்பதே வரலாற்று நியதியாய் இருந்தது.

இவ்வாறு நெருக்கடி ஏற்பட்டதனால் சோவியத்துடன் ஒப்பந்தமெழுத வேண்டுமென்ற கருத்து இந்தியாவின் இராஜதந்திர வட்டாரங்களில் உருவானது.

முன்னாள் இந்திய வெளி விவகார அமைச்சர் தினேஷ் சிங் (Dinesh singh) இந்திய சோவியத் ஒப்பந்தம் சம்மந்தமாக சோவியத் தலைவர் பிரஷ்நெவ்வுடன் 1969 செப்ரெம்பர் மாதம் மொஸ்கோவில் உரையாடினார். அப்போது பிரஷ்நெவ் அவரின் ஆசிய கூட்டுப் பாதுகாப்பு முறைமை (Asian collective security system) என்னும் கருத்தின் அடிப்படையில் Dinesh singh இடம் பின்வருமாறு கேட்டார். சோவியத்துடன் இணைந்த நட்பு நாடுகள் இப்பிராந்தியத்தில் உருவாக வேண்டும். அந்நாடுகளில் தளங்களுடன் கூடிய சகல ஆயுத விநியோகத்தையும் சோவியத் மேற்

கொள்ளும். நெருக்கடி நிலைமைகளில் தேவையேற்படின் அத்தளங்களைச் சோவியத் உபயோகிக்கும் (14) என்றும் கூறினர். இந்தியா இநிக்கலுத்திற்குச் சம்மதிக்கவில்லை. சோவியத் யூனியனின் collective security system பற்றியும், இந்திய உறவு பற்றியும் இங்கு சற்று நோக்க வேண்டியுள்ளது. சோவியத் யூனியன் இக் collective security system எனும் கொள்கையானது 1965-66 சமாதானப் பேச்சு வார்த்தையில் (இந்தியா-பாகிஸ்தான் பிரச்சனை சம்பந்தமான பேச்சு வார்த்தை) வேர்விட்டதென்று குறிப்பிடலாம். 1968 யூன் மாதம் 27ம் திகதி குரோமிக்கா சோவியத் சுப்ரீமில் ஆற்றிய உரையிலும், கொவலிச என்பவரால் 1968 செப்ரெம்பர் மாதம் 26ம் திகதி பிராவ்தா பத்திரிகையில் Sovereignty and International obligations of socialist Countries என்ற கட்டுரையிலும் 1968 ஒக்ரோபர் 3ம் திகதி குரோமிகோ ஐ.நா சபையில் ஆற்றிய உரையிலும், 1968 நவம்பர் 12ம் திகதி பிரஷ்நெவ் வோர்சோவில் ஆற்றிய உரையிலும் Asian collective security system. பற்றிய கருத்துக்கள் வெளியாகின. பாட்டாளிகள் சர்வதேச வாதம், சோசலிசக் குடும்பம் என்பவற்றின் அடிப்படையில் ' சோசலிச சமூகத்திற்கு ' உள்ளேயும் புறத்தேயும் ஆபத்தெழும் போது சோவியத் அதில் தலையிடுமென்பது தான் இத்திட்டம் பற்றிய அடிப்படையென்று கூறப்பட்டது. (15) (இந்திரா தலைமையிலான அரசாங்கத்தை சோஷலிசக் குடும்பங்களைக் கொண்ட ஒரு முற்போக்கான ஆட்சியென பிரஷ்நெவ் 1973ம் ஆண்டு இந்திய விஜயத்தின் போது குறிப்பிட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இது பின்னால் விபரமாகக் கூறப்படும்) சோவியத்தின் இத்திட்டத்திற்கு இந்தியா சம்மதிக்கவில்லை. இரு தேசங்களுக்குமிடையேயான பரஸ்பர உறவையே இந்தியா வலியுறுத்தியது.

சீன அமெரிக்க உறவு வளர்வதற்கான சாத்தியக் கூறுகள் தென்பட்டன. சமபலக் கொள்கை கருதியும், விஞ்ஞான தொழில்நுட்ப தேவை கருதியும் சீனாவிற்கு ஒரு பலம் பொருந்திய வெளி அரசின் நட்புத் தேவைப்பட்டது. மாசேதுங்கின் சிந்தனைப் படி "எதிரியின் எதிரி எனது நண்பன்" என்பதற்கிணங்க சீனாவின் எதிரி சோவியத். சோவியத்தின் எதிரி அமெரிக்கா. எனவே அமெரிக்கா சீனாவின் நண்பன். சீனாவின் பகைவன் இந்தியா. இந்தியாவின் பகைவன் அமெரிக்கா. எனவே அமெரிக்கா சீனாவின் நண்பன். இந்தியாவின் பகைவன் பாகிஸ்தான். எனவே பாகிஸ்தான் சீனாவின் நண்பன். பாகிஸ்தானின் நண்பன் அமெரிக்கா. எனவே நண்பனின் நண்பனாகிய அமெரிக்கா சீனாவின் நண்பன்.

EVELYN RUTNAM INSTITUTE JAFFNA REFERENCE LIBRARY 419

இந்த வகையில் பல வகைகளிலும் சீனா தனது நண்பனாக அமெரிக்காவை அணைக்கிறது என்பது 1970 களின் ஆரம்பத்தில் தெரியத் தொடங்கியது. அமெரிக்காவுடனான சீன உறவுக் கோட்பாட்டை "மூன்றுலகக் கோட்பாடு"(16) என்ற பெயரில் மாவோ 1974ம் ஆண்டு தான் முன் வைத்தாராயினும் 1970 களின் ஆரம்பத்திலேயே அமெரிக்கா சார்பு நடவடிக்கைகளைச் சீனா கைக்கொள்ளத் தொடங்கியது. அமெரிக்கர் இராஜதந்திரி கென்றி கீசிங்கரின் 1971ம் ஆண்டுச் சீன விஜயம் இவ்வுறவுப் போக்கின் ஓர் அம்சமாகும்.

இந்தியாவிற்குள் சோவியத்திற்கு எதிர்ப்பு உருவாகத் தொடங்கியமை ஆகியவற்றின் பின்னணியில் சோவியத் இந்தியாவுடனான உறவை உறுதிப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. பங்காளதேஷ் பிரச்சனை ஒரு நெருக்கடியான காலகட்டத்தை அடையும் காலகட்டத்தில் இராஜதந்திர ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் இந்தியா தன்னை உறுதிப்படுத்த வேண்டியேற்பட்டது. பங்காளதேஷ் பிரச்சினையில் பாகிஸ்தான் அமெரிக்காவையும் சார்ந்து செயற்பட்டு வந்தது. இத்தகைய கட்டத்திற் தான் 1971ம் ஆண்டு சோவியத் இந்திய 20 ஆண்டு நட்புறவு ஒப்பந்தம் கைச்சாத்தாகியது.

பங்காளதேஷ் பிரச்சினையில் இந்தியா, சீனா, சோவியத் அமெரிக்கா ஆகிய நாடுகளின் சிந்தனைப் போக்குகளை அவதானிப்போம். இந்தியாவைப் பொறுத்த வரை இந்தியாவிற்குப் பக்கத்தில் பலம் பொருந்திய பாகிஸ்தான் இருப்பது இந்தியாவிற்குப் பாதகமானது. எனவே பாகிஸ்தானிலிருந்து பங்காளதேஷ் பிரிய உதவுவதன் மூலம் இந்தியாவின் எதிரியாகிய பாகிஸ்தான் பெரிதும் பலவீனமடையும். சோவியத்தைப் பொறுத்த வரையிலும் சோவியத்திற்கு அருகில் தொடர்புபடும் நாடு பாகிஸ்தான். எனவே பாகிஸ்தான் இரண்டாகப் பிரிவது சோவியத்திற்கும் நன்மை பயக்கும். இந்தியாவிற்குப் பக்கத்தில் அதற்குத் தலையிடி கொடுக்கக் கூடியதாகப் பலம் பொருந்திய பாகிஸ்தான் இருப்பதையே சீனா விரும்பியது. எனவே பாகிஸ்தானிலிருந்து பங்காளதேஷ் பிரிவதை சீனா விரும்பவில்லை. அமெரிக்காவைப் பொறுத்த வரையில் இந்தியாவிற்குப் பக்கத்தில் ஒரு பலம் பொருந்திய பாகிஸ்தான் இருப்பதையே விரும்பியதால் பங்காளதேஷ் பிரிவதை அது விரும்பவில்லை.

பங்காளதேஉஷ் பிரச்சினை சம்பந்தமாக சில அடிப்படை அம்சங்களை இங்கு விளக்க வேண்டியது அவசியமாகும். 1947ம் ஆண்டு இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்தது. இவ்வாறு பிரிக்கப்பட்ட பாகிஸ்தான் எனும் நாடு ஒரு தொடர்ச்சியான நிலப்பரப்பாக அமையவில்லை. மத அடிப்படையில் உருவாகிய இந்நாட்டின் இரு பகுதிகளில் ஒன்று இந்தியாவிற்கு மேற்கேயும், மற்றது இந்தியாவிற்கு கிழக்கேயும் இரு பகுதிகளாயிருந்தன. இதில் முதலாவது மேற்குப் பாகிஸ்தான் என்றும், இரண்டாவது கிழக்கு பாகிஸ்தான் என்றும் அழைக்கப்பட்டன. இவ்விரு பகுதிகளுக்கும் நடுவே இந்தியா அமைந்திருந்தது. இரு பகுதிகளுக்கும் இடையேயான இடைவெளி ( நிலப்பரப்பில் ) 1200 மைல்களாகும். இங்குள்ள கிழக்குப் பாகிஸ்தானே பங்காளதேஉஷ் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட அரசாகும். 1948ம் ஆண்டிலேயே பாகிஸ்தானில் வங்காளியரின் பிரச்சினை (கிழக்குப் பாகிஸ்தான்) தோற்றம் பெற்று விட்டது. பாகிஸ்தானின் மொத்த சனத்தொகையில் 56%த்தினர் வங்காளிகளாவர். இவர்களின் தாய்மொழி வங்காளி மொழியாகும். பாகிஸ்தானின் மொத்த சனத்தொகையில் 4% த்தினரே உருது மொழி பேசுவோராவர். இந் 4% த்தினரால் பேசப்படும் உருது மொழியே பாகிஸ்தானின் உத்தியோக மொழியாகுமென 1948ல் ஜின்னா குறிப்பிட்டதும்(17) வங்காளியின் போராட்டம் ஆரம்பமாகியது. இவ்வாறு 1948ல் போராட்டம் உதயமாகிப் பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு காரணங்களை முன்னிட்டு மேற்குப் பாகிஸ்தானிய ஆட்சியாளரை எதிர்த்து 24 ஆண்டுகளாக வங்காளத்தில் போராட்டம் இடம் பெற்று வந்தது. பிரதேச சுயாட்சியையும், ஊனயக அரசாங்கத்தையுமே வங்காளியர் பெரிதும் வற்புறுத்தி வந்தார்கள். 1971ம் ஆண்டு மார்ச் மாதம் 25ம் திகதி வரை அவாமிலீக் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்கவில்லை.(18) ( ஆங்காங்கே தனிநாட்டுக் கோரிக்கை பற்றிய கருத்துகள் முன் கூட்டியே இருந்து வந்துள்ளன ) 1947ம் ஆண்டு பாகிஸ்தான் அரசு உருவாகியதில் இருந்து 1970ம் ஆண்டு வரை ஒரு பொதுத் தேர்தலும் நிகழவில்லை. 1970ம் ஆண்டு டிசம்பர் மாதம் தான் பாகிஸ்தானில் முதலாவது பொதுத் தேர்தல் இடம் பெற்றது. இத்தேர்தலில் கிழக்குப் பாகிஸ்தானைத் தளமாகக் கொண்ட முஜிபுர் ர மானின் அவாமிலீக் கட்சி முழுப் பாகிஸ்தானின் 313 ஆசனங்களில் 167 ஐப் பெற்றது. இத்தேர்தலில் சுல்பிகார் அலி புட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி ( P.P.P ) 80 ஆசனங்களை மட்டுமே பெற்றிருந்தது. இந்த வகையில் ஆட்சி அமைக்கக் கூடிய பெரும்பான்மைப் பலத்தை வங்காளிகள் அடைந்து கொண்ட போதிலும் மேற்குப் பாகிஸ்தான் ஆட்சியாளர்கள்

ஆட்சியை அவாமி லீக்கிடம் ஒப்படைக்கவில்லை. இதற்கு மாறாக 1971 மார்ச் 25ம் திகதி நள்ளிரவு 11 மணியளவில் கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள டாக்கா நகரில் உறங்கிக் கொண்டிருந்த நிராயுதபாணிகளான மக்கள் மீது இராணுவம் தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதலிலிருந்து தான் பங்காளதேஷ் வரலாற்றில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து 1971 மார்ச் 26ந் திகதி முக்திபாகினிப்படை கைப்பற்றிய ஒரு வானொலி நிலையத்தின் மூலம் பங்காளதேஷ் தனிநாட்டுப் பிரகடனம் செய்யப்பட்டது. 1971 எப்ரல் மாதம் 17ம் திகதி முஜிபுரை (முஜிபுர் சிறையில்) ஜனாதிபதியாகக் கொண்ட போர்க் கால மந்திரிசபை பிரகடனப்படுத்தப்பட்டது. இம்மந்திரிசபை இந்தியாவிலுள்ள கல்கத்தாவிலிருந்து செயற்படத் தொடங்கியது. இப்போர்க்கால மந்திரிசபை தமக்கு இராணுவ உதவி செய்யுமாறு இந்திய அரசாங்கத்தைக் கோரிக் கொண்டிருந்தது. பாகிஸ்தானிய இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் 30 இலட்சம் வங்காளிகள் கொல்லப்பட்டும் 1 கோடி வங்காளிகள் இந்தியாவுக்குள் தஞ்சம் புகுந்தும் இருந்த வேளையில் தான் இந்தியா பங்காள தேஷைத் தனிநாடாக அங்கீகரித்தது. 1971 டிசம்பரில் இந்திய இராணுவம் பங்காள தேஷுக்குட் பிரவேசித்தது. இந்திய இராணுவம் பிரவேசிக்க இருப்பதை உணர்ந்த அமெரிக்கா தனது விமானம் தாங்கிக் கப்பலை இந்திய கடற் பிராந்தியத்தை நோக்கித் திருப்பியது. ஆனால் இந்தியா பின்வாங்காது சோவியத்தின் அனுசரணையுடன் பங்காளதேஷ் பிரச்சினையில் தனது இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. அமெரிக்கா தனது விமானத் தாங்கிக் கப்பலைத் திருப்பி அழைத்தது. பங்காளதேஷ் பிரச்சினையில் இந்தியா இராஜதந்திர ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் வெற்றியீட்டியது, தென்னாசியாவில் இந்தியா ஒரு வல்லரசு என்ற நிலையை எடுத்துக்காட்டும் சம்பவமாக அமைந்தது.

அமெரிக்க அரசும், சீன அரசும் பங்காளதேஷ் பிரச்சினையை இராஜதந்திரக் கண்ணோட்டத்தில் பார்த்தனவே தவிர மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் இதனைப் பார்க்கவில்லை. 30 இலட்சம் வங்காளிகள் கொல்லப்பட்டும் 1 கோடி வங்காளிகள் அகதிகளாக்கப்பட்டுமிருந்த நிலையில் உலக மக்களின் ஆதரவும் அனுதாபமும் பங்காளதேஷ் மக்கள் பக்கம் வளர்ந்து கொண்டிருந்த வேளையிலும், அமெரிக்க அரசினதும், சீன அரசினதும் உதவிகளும், ஆயுதங்களும் மேற்குப் பாகிஸ்தான் ஆட்சியாளர் பக்கமே குவிந்தன.

இந்தியா படை உதவி செய்யு முன்னரே பங்காளதேஷ் மக்களுக்குச் சார்பான உலகப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தது. பங்காளதேஷ் பிரிய உதவுவது இந்தியாவைப் பொறுத்து இலாபகரமானது. பாதுகாப்பு அடிப்படையில் கிழக்குப் பாகிஸ்தான் இருப்பது (பங்காளதேஷ்) இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகமானது. இவ்வாறு பிரிவதன் மூலம் அதில் எதிர்நோக்கப்பட்ட ஆபத்து கணிசமான அளவு தணிந்துள்ளதென்றே குறிப்பிடலாம். பங்காளதேஷ் பிரிய உதவுவது புவியியல் அடிப்படையிலும், வேறும் இராஜ தந்திர ரீதியிலும் சோவியத்திற்கு சாதகமானது. வங்காளிகள் மேற்குப் பாகிஸ்தான் ஆட்சியாளரால் ஒடுக்கப்பட்டமை உண்மையில் ஒரு மனிதாபிமானப் பிரச்சினையே. இது சர்வதேச இராஜதந்திரத் தேவைகளுக்கான போராட்டத்தின் மத்தியிலேயே தீர்க்கப் பட்டது. சர்வதேச உறவு பொறுத்து தென்னாசியப் பிராந்தியத்தில் சோவியத்தை விட அமெரிக்காவினது உறவு, பலம் என்பன குறைவானவை. அதேவேளை இப்பிரச்சனையைத் தீர்த்து வைக்க முற்பட்ட நாடு (இந்தியா) இப்பிராந்தியத்தில் ஓர் பலம் பொருந்திய நாடாகும். இந்த வகையில் எல்லா விதமான அனுகூலங்களின் மத்தியில் இந்தியா இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க (பங்காளதேஷைத் தனி நாடாக்க ) தீர்மானம் எடுத்தது. தென்னாசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் நிலையைப் பலவீனப்படுத்தியதென்ற வகையிலும் இப்பிராந்தியத்தில் பிராந்திய வல்லரசாக இந்தியாவை முன்னணிக்குக் கொண்டு வந்ததென்ற வகையிலும் பங்காளதேஷ் பிரச்சினை சர்வதேச உறவு குறித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும். அமெரிக்க ஜனாதிபதியாயிருந்த நிக்ஸன் 1972ம் ஆண்டு ஐக்கிய அமெரிக்க காங்கிரஸிற்கு விடுத்த வெளிநாட்டுக் கொள்கை அறிவிப்பில் இந்தியா ஒரு வலிமை பொருந்திய அரசென்றும் இந்தியாவின் வெற்றி (1971) பெரிய அரசுகளின் உறவு பொறுத்து மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியதாய் அமைந்துள்ளது(19) என்றும் தெரிவித்திருந்தமை இவ்விடத்திற் கவனிக்கத்தக்கதாகும்.

பங்காளதேஷ் பிரச்சினையில் இந்தியா வெற்றியீட்டியதைத் தொடர்ந்து இந்தியாவுடனான அமெரிக்கக் கொள்கையில் சற்று மாற்றமேற்பட்டது. இந்தியாவுடன் நேரடியாகப் பகைத்துக் கொள்ளாமல் இந்தியா மீது சாந்தமான உதாசீனப் போக்கை(20) (Benign neglect Policy) கைக்கொள்ளுதல் என்று தீர்மானிக்கப்பட்டது. இக்கொள்கையைப் பெரிதும் வற்புறுத்தியவர் கென்றி கீசிங்கர் ஆவார். இந்தியாவின்

இவ்வெற்றியானது மறுபுறமாக சீன-அமெரிக்க உறவு விருத்தியடைவதற்கு ஒர் காரணமாகவும் அமைந்தது.

அமெரிக்க சீன உறவு வளர்ச்சியடைந்து வந்தது. இதன் ஒரு முக்கிய கட்டமாக 1972ம் ஆண்டு பெப்ரவரி மாதம் அமெரிக்க ஜனாதிபதி நிக்சன் மேற்கொண்ட சீன விஜயம் அமைந்திருந்தது. (கம்யூனிச சீனா 1949ல் உருவாகிய பின்பு அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் சீனாவிற்கு விஜயம் செய்தமை இதுவே முதற் தடவை ) இவ்விஜயத்தின் போது பீக்கிங்கில் நிக்ஸன் குறிப்பிட்ட வார்த்தைகள் கவனிக்கத்தக்கது. " கடந்த காலத்தில் எங்கள் மத்தியில் பெரும் வேறுபாடுகள் இருந்து வந்துள்ளன. இப்போதும் அவ்வாறான வேறுபாடுகள் இருக்கின்றன. ( குறிப்பாக சித்தாந்த ரீதியான வேறுபாடுகள் ) எங்களுக்கிடையேயான பொதுவான நலன்கள் இவ்வேறுபாடுகளையும் கடந்து எங்களை ஒன்றாக இணைக்கின்றன "(21) என்று குறிப்பிட்டார். மேலும் சீன - அமெரிக்க உறவு LONG MARCH ஆக அமையட்டும் என வர்ணித்தார். (1937ம் ஆண்டு மாஓ-சே-துங் தலைமையில் சீனாவில் நீண்ட படை நடப்பு (Long March) நடைபெற்றது. சீனக் கம்யூனிசத்தின் வரலாற்றில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கிய LONG MARCH என்னும் வார்த்தைகளை நிக்ஸன் இங்கு புதிய அர்த்தத்தில் அதாவது, சீனாவும் அமெரிக்காவும் ஒன்றிணைந்த ஒரு நீண்ட பயணத்தை ஆரம்பிப்போமாக. "Let us start a Long march together"(22) எனக் குறிப்பிட்டார்) நிக்ஸனுக்கான வரவேற்புரையை சீனப் பிரதமர் சூ.என்-லாய் நிகழ்த்துகையில் " நாங்கள் இரு வேறுபட்ட சமூக அமைப்பை உடையவர்கள். (சித்தாந்த வேறுபாடு ) ஆயினும் எங்கள் உறவுக்கான கதவுகள் திறபடும் காலம் ஏற்பட்டுள்ளது. அமெரிக்க மக்களும் நல்லவர்கள். சீன மக்களும் நல்லவர்கள்!(23) எனக் குறிப்பிட்டார். பொதவாக சித்தாந்த வேறுபாடுகள் சர்வதேச உறவு பொறுத்துப் பின்தள்ளப்பட்டுச் செல்வதைக் காண முடிகிறது. இவ்வாறு அமெரிக்க சீன உறவு விருத்தியடையத் தொடங்கியதால் சர்வதேச ரீதியானதும், பிராந்திய ரீதியானதுமான இரு தரப்புத் தேவைகளின் மத்தியில் சோவியத் - இந்திய உறவு மேலும் வலுவடையத் தொடங்கியது.

நிக்ஸனின் 1972ம் ஆண்டுச் சீன விஜயத்தைத் தொடர்ந்து 1973ம் ஆண்டு சோவியத் தலைவர் பிரஉஷ்நேவ் இந்தியாவிற்கு விஜயம் செய்தார். இவ்விஜய்த்தின் போது சோவியத்

தலைவர் ஆளும் இந்திரா தலைமையிலான அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் உரைகளை நிகழ்த்தினர். (1969ம் ஆண்டு காங்கிரஸில் பிளவேற்பட்டதென்பதும், இவ்வாறேற்பட்ட பிளவே பிற்காலத்தில் ஜனதாக் கட்சியாக உருவெடுத்ததென்பதும் குறிப்பிடத்தக்கது) இவ்விஜயத்தின் போது பிரஷ்நெவ் ஆற்றிய உரை கவனிக்கத்தக்கது. அதாவது ஆளும் காங்கிரஸ் முற்போக்குக் கொள்கையைப் பிரதிபலிக்கின்றதென்றும் சோஷலிசத்தை இறுதி இலட்சியமாகக் கொண்டு ஜனநாயக ரீதியான திட்டங்களையும், சமூக பொருளாதார மாற்றங்களையும் அது மேற்கொண்டு வருகிறதென்றும்(24) குறிப்பிட்டார். இறுதியில் ஜனதாக் கட்சியாகப் பரிணமித்த அணியினர் தீவிர வலது சாரிப் போக்குள்ள இந்துமத வெறி பிடித்த மேற்கத்தைய ஆதரவாளர்கள் என்று சோவியத் கருதியது.(25) இவ்வணியினரின் மேற்குத் தேச ஆதரவுப் போக்கு (அமெரிக்கா பக்கம்), சோவியத் – இந்திய உறவின் இலகுவான போக்கை சற்று சிக்கலுக்குள்ளாக்கி விடுமென்றும், ஆளும் காங்கிரஸ் பதவியில் நிலைப்பதன் மூலமே சோவியத் – இந்திய உறவு இலகுவானதாய் அமையுமென்றும் சோவியத் சிந்தித்ததன் விளைவாகவே இவ்வாறு ஆளும் காங்கிரஸிற்கு சார்பான உரையை பிரஷ்நெவ் ஆற்றினர். சோவியத்தைப் பொறுத்து இந்தியாவுடன் உறுதியான உறவு இருக்க வேண்டும் என்பதன் அவசிய தேவையே இவ்வாறு சோவியத் நடந்து கொள்ளக் காரணமானது. இதனை மேலும் விளங்கிக் கொள்ள இன்னுமோர் அம்சத்தையும் இங்கு அவதானித்தல் நல்லது. பிரஷ்நெவின் விஜயத்தின் போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (CPI) தூதுக்குழுவொன்று பிரஷ்நெவைச் சந்தித்தது. அத்தூதுக் குழுவிடம் பிரஷ்நெவ் கேட்டுக் கொண்டதாவது "அபிவிருத்தி அடையும் பொருளாதாரத்தில் உற்பத்தி ஒரு பிரச்சினையாக இருக்கும் போது வேலை நிறுத்தம் மேற்கொள்வது அவசியமற்றது"(26) என்பதாகும். இதில் வேலை நிறுத்தங்களை மேற்கொள்வதால் இந்திரா அரசாங்கத்தின் உறுதிப்பாடு குலைந்து விடக் கூடும், என்ற அச்சம் சோவியத்திற்கு இருந்துள்ளதெனத் தெரிகின்றது. மேலும் 1975ம் ஆண்டு இந்திராகாந்தியின் அரசாங்கம் பிறப்பித்த அவசர காலச் சட்டத்தை சோவியத்தின் உத்தியோகபூர்வ பத்திரிகைகள் வரவேற்றிருந்தன. "ஏகாதிபத்தியத்தைப் பின்னணியாகக் கொண்ட வலது சாரிச் சந்தர்ப்பவாதத்திற்கு எதிரான உரிய நடவடிக்கை"(27) எனக் குறிப்பிட்டன. இவ்வாறு சோவியத் இந்திராவுக்கு நேரடியாக ஆதரவளித்தது. இந்த வகையில் இந்தியாவுடன் உறுதியான உறவை வைத்திருக்க வேண்டுமென்ற அவசியம் சோவியத் பக்கம் இருந்துள்ளதென்பது தெளிவாகிறது.

1977ம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியாவில் பொதுத் தேர்தல் நிகழ்ந்தது. இந்திரா அரசாங்கத்தின் 49 அமைச்சர்களில் இந்திரா உட்பட 44 அமைச்சர்கள் தோல்வியுற்றனர். மொராஜி தேசாய் பிரதமரானார். புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததும் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம் நிகழுமெனப் பொதுவாக எதிர்பார்க்கப்பட்டது. இந்தியா "உண்மையான"(28) அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடிக்குமென மொரார்ஜி குறிப்பிட்டார். சோவியத் பக்கமான உறவுகள் குறையும் என்பதை இவ்வார்த்தைகள் சுட்டி நின்றன. இந்திய - சோவியத் ஒப்பந்தம் இந்தியாவின் அணிசேராக் கொள்கைக்குத் தடையாய் அருக்குமெனில் ஜனதா அரசாங்கம் அது சம்மந்த மான மாற்றங்களில் ஈடுபடுமென மொராஜி தேசாய் குறிப்பிட்டார். ஜனதா அரசாங் கம் எவ்வளவு தான் விரும்பிய போதிலும் அமெரிக்கா பக்கம் இந்தியா சார யதார்த்தம் இடம் கொடுக்கவில்லை. ஒரு புறம் அமெரிக்க சீன உறவு விருத்தியடைந்து வந்தமையும், மறுபுறம் சீன - பாகிஸ்தானிய உறவு விருத்தியடைந்து இருந்தமையும் போன்ற காரணிகள் இணைந்து இந்திய - சோவியத் உறவே உறுதிப்பட வேண்டியதற்கான யதார்த்தம் நிலவியது. உலகின் வரலாற்றுப் போக்கில் அடிப்படை மாற்றமெதுவும் நிகழாத பட்சத் தில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் நிகழ முடியாதிருந்தது.

ஜனதா அரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஒரு மாதத்தில் சோவியத்தின் வெளி விவ கார அமைச்சர் குரோமிகோ இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டார். 1971ம் ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் உறவு உறுதிப்படுத்தப்பட்டது. மொராஜி தேசாய் ஒக் ரோபர் 21-26 வரை சோவியத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டார். சோவியத் சுப்ரீமினதும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினதும் பெருந் தலைவர்கள் புடை சூழ பிரஉஷ் நெவ் விமான நிலையம் வந்து மொராஜியை வரவேற்றார். " இந்திய - சோவியத் உறவு தனி நபர்களை அடிப்படையாகக் கொண்டதோ. அன்றிச் சித்தாந்தத்தை அடிப்ப டையாகக் கொண்டதோ அல்ல. அது இரு தேச மக்களினதும் நலன்கள் சம்பந்தப்பட்ட சமத்துவ அடிப்படையிலான உறவு"(29) என மொராஜி தேசாய் இவ்விஜயத்தின் போது விபரித்தார். இந்திய - சோவியத் உறவு இருந்து வந்தது போலவே சகல வகைகளிலும் உறுதிப்படுத்தப்பட்டது. இந்தியாவின் உறவு சோவியத்திற்கும், சோவியத் உறவு இந்தி யாவுக்கும் அவசியப்பட்டது. சோவியத் அரசு ஜனதாவிற்கு எதிரான கருத்துகளை முன்பு தெரிவித்திருந்த போதிலும் தற்போதைய சூழ்நிலையில் ஜனதா அரசாங்கத்துடன் உறவினை

வளர்க்கப் பின்நிற்கவில்லை. இந்தியாவிலேற்பட்ட ஆட்சி மாற்றம் இந்திய - சோவியத் உறவைப் பாதிக்கவில்லையென்றே கூறலாம். 1980ம் ஆண்டு மீண்டும் இந்திராகாந்தி ஆட்சிக்கு வந்தார். இந்திரா ஆட்சியில் இருப்பது இந்தியாவுடனை உறவு குறித்து சோவியத்திற்கு சற்று இலகுவானதாக இருந்தது. 1979, டிசம்பர் 26ல் சோவியத் இராணுவம் ஆப்கானிஸ்தானுட் பிரவேசித்தது. ஆப்கானிஸ்தானுள் சோவியத்தின் இராணுவப் பிரவேசம் இந்தியாவிற்கு மகிழ்ச்சியளிக்கவில்லை. நீண்ட காலப் போக்கில் இந்தியா இதனை விரும்ப முடியாது. இந்தியாவிற்கு அண்மையில் வல்லரசொன்றின் இராணுவம் நிலை கொள்வதை இந்தியா விரும்ப மாட்டாது. ஆயினும் உடனடி நிலைமைகளைக் கருத்தில் கொண்டு சோவியத்தை இந்தியா எதிர்க்காதிருக்க வேண்டியிருந்தது. இது சம்பந்தமாக ஐ.நா.சபையில் இந்தியப் பிரதிநிதி 12.1.1980 அன்று கூறியதாவது " ஆப்பானிஸ்தான் அரசாங்கத்தின் வேண்டுகோளின் படி சோவியத் யூனியன் 1979ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் திகதி தனது இராணுவத்தை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பி வைத்தது. வெளிநாட்டு இராணுவமோ அன்றித் தளங்களோ எந்தவொரு நாட்டிலும் இருப்பதை இந்தியா எதிர்க்கின்ற அதேவேளை ஆப்கானிஸ்தான் அரசாங்கம் படைகளை வாபஸ் பெறுமாறு சோவியத்தைக் கேட்டுக் கொள்ளும் போது அவ்வாறு படைகள் வாபஸ் பெறப்படுமென்று இந்தியாவின் நட்பு நாடாகிய சோவியத் யூனியன் சொல்வதை இந்தியா நம்பாது விட நியாயமில்லை "(30) எனக் கூறினர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்தியா பொறுத்து குறிப்பாக ருஉஷ்யாவிற்கு எதிரான ஒரு யுத்தத் தடுப்பு வலயமாக ஆப்கானிஸ்தான் இருந்ததென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இங்கு உடனடி நிலைமைகளைக் கருத்திற் கொண்டு இந்தியா இப்பிரச்சினையிற் செயற்பட வேண்டியுள்ளது. பாகிஸ்தானுக்கு அருகில் ஆப்கானிஸ்தான் இருக்கிறது. எனவே ஆப்கானிஸ்தானில் சோவியத் இராணுவம் இருக்கும் பட்சத்தில் பாகிஸ்தானின் கவனம் ஆப்கான் நோக்கித் திரும்பும். இதனால் இந்தியா மீதான பாகிஸ்தானின் கவனமும் குறையும். அதேவேளை மறுபுறமாக ஆப்கானிஸ்தான் பிரச்சினையின் நிமித்தம் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி வழங்குகின்றது. சீனாவின் உதவியும் இந்த வகையில் பாகிஸ்தானுக்கு அதிகரிக்கின்றது. இவ்வாறான ஆயுத உதவிகள் நீண்ட காலத்தில் இந்தியாவிற்கு ஆபத்தானது. [illegible] ஆப்கான் பிரச்சினை இந்தியாவைத் திரிசங்கு சொர்க்க நிலையில்

வைத்திருக்கின்றது. இப்பிரச்சினையில் இந்தியா இரு வகையான தந்திரங்களைக் கையாள்கின்றது. ஒன்று அமெரிக்காவும், சீனாவும் பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி அளிக்குமாயின் இந்தியா சோவியத்துடன் மேலும் தனது உறவுகளைப் புதுப்பித்தும், வலுவாக்கியும் கொள்ளும் என அறிவுறுத்துகின்றது. இது சம்பந்தமாக இந்திரா காந்தி 16.1.83 அன்று குறிப்பிட்ட வாக்கியம் இங்கு குறிப்பிடத்தக்கது.(31) இரண்டாவதாக சீனாவுடனும் அமெரிக்காவுடனும் இந்தியா தனது உறவைச் சற்று வளர்த்துக் கொள்ள முயற்சிக்கின்றது. இந்திரா காந்தியின் 1982ம் ஆண்டு அமெரிக்க விஜயம் இதன் வெளிப்பாடாகும். இவற்றையெல்லாம் மீறி இந்தியாவைச் சாந்தப்படுத்த சோவியத் பலவாறான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது.

இன்று அமெரிக்காவின் முக்கிய கவனம் பசுபிக் பிராந்தியத்திலும், மத்திய அமெரிக்க நாடுகளிலும் பதிந்துள்ளது. மற்றைய பிராந்தியங்களில் அமெரிக்காவிற்கு இருக்கும் நிலைமைகளைப் பேணிக் கொள்வதிலேயே அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. 1970களின் ஆரம்பத்திலிருந்து அமெரிக்க குடியரசுக் கட்சி பசுபிக் பிராந்தியத்தில் தனது கவனத்தை அதிகரிக்கத் தொடங்கியது. 1971ம் ஆண்டு பங்காளதேஷ் பிரச்சினையில் இந்தியா அடைந்த வெற்றியானது தென்னாசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் வலிமையைக் குறைத்தது. இதன் பின் தென்னாசியாவில் இந்தியாவை ஒரு பிராந்திய வல்லரசாக அங்கீகரிக்கும் போக்கையும், இந்தியாவுடன் நேரடியாகப் பகைக்காத போக்கினையும் அமெரிக்கா கைக்கொள்ளத் தொடங்கியது. இத்தகைய பின்னணியில் தான் இந்தியா பொறுத்து அமெரிக்கா Benign neglect கொள்கையை வகுத்துக் கொண்டது. 1972ம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் உலகிலுள்ள வலிமை பொருந்திய நாடுகளுள் இந்தியாவும் ஒன்று எனக் குறிப்பிட்டிருந்தமை முன்பு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும், 1984ம் ஆண்டு மே மாதம் இந்தியாவிற்கு விஜயம் செய்த ஜோர்ஜ் புஷ் தென்னாசியாவில் இந்தியாவைப் பிராந்திய வல்லரசு(32) என்று குறிப்பிட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இது இந்தியாவினது வளர்ச்சியையும், அதற்கான அங்கீகாரத்தினையும் காட்டுகின்ற போதிலும் அமெரிக்காவின் போக்கு இந்தியாவைப் பாதிக்காது விடவில்லை.

அமெரிக்கா தனது கவனத்தைப் பசுபிக் பிராந்தியத்திற் செலுத்தியுள்ளமையானது மறுபுறமாக சீனாவூடாக இந்தியாவுக்கு எதிர் காலத்தில் நெருக்கடியேற்படுவது சாத்தியமாகும். எனவே அமெரிக்காவின் பசுபிக் பிராந்தியக் கொள்கை மறுபுறமாக

இந்தியாவைப் பாதிக்கக் கூடியது. இந்தியா பொறுத்து அமெரிக்கா கடைப்பிடிக்கும் கொள்கையையும் தென்னுசியாவில் அமெரிக்கா தனது கவனத்தைக் குறைத்துள்ளது என்ற விடயத்தையும் இங்கு ஆழமாக ஆராய வேண்டும். இந்தியாவின் வளர்ச்சி ஆசியாக் கண்டத்திலும் பொதுவாக உலகிலும் சமபலக் கொள்கையிற் பாதிப்பேற்படுத்தக் கூடியது. எனவே இதன் பொருட்டு இந்தியாவின் வளர்ச்சிக்குச் சமதையாக சீனுவின் இராணுவத்தை வளர்த்து விடுதல், அமெரிக்காவிற்கு அவசியமாகும். தற்போது சீனு கடைப்பிடித்து வரும் நான்ங் நவீன மயமாக்கல் திட்டத்தில் ஒர் அம்சம் இராணுவத்தை நவீன மயப்படுத்துவதாகும். இந்த வகையில் அமெரிக்கா பக்கமும், சீனு பக்கமுமுள்ள தேவைகள் இரண்டும் ஒன்ருகப் பொருந்துகின்றது. மேலும் 100 கோடி மக்களைக் கொண்ட சீனுவின் கதவுகள் அமெரிக்காவிற்குத் திறந்து விடப்பட்டிருப்பது பொருளாதார ரீதியில் அமெரிக்காவிற்கு இலாபகரமானது. இதுவும் சீன அமெரிக்க உறவை அதிகரிக்க வைக்கும். சீனுவின் இந்நிலையைப் பேணுவதற்கு சீனுவில் இப்போது நிலவும் ஆட்சியை ஸ்திரப்படுத்த அமெரிக்கா முயலும். பொதுவாகச் சீனுவுடனுன அமெரிக்க உறவு இந்தியாவை ஏதோ ஒரு வகையில் பாதிக்கக் கூடியதாகவே அமையும்.

தென்னுசியப் பிராந்தியத்தில் அமெரிக்கா தனது கவனத்தைக் குறைத்துள்ளது என்ற விடயத்தை இங்கு சரியாக விளங்க வேண்டும். ஒன்று தென்னுசியாவில் இந்தியாவுடன் நேரடியாக முரண்படுவதில்லை. அதேவேளை இந்தியாவிற்கு அருகில் இந்தியாவுடன் முரண்படத்தக்க பாகிஸ்தானை என்றும் உயிரோடு வைத்திருப்பது என்பதாகும். அடுத்து இந்தியாவில் ஸ்திரமின்மையை ஏற்படுத்துவதற்காக உள்நாட்டு ரீதியாகவும், எல்லைப்புற ரீதியாகவும் மறைமுகமாக நின்று தொல்லைகளைக் கொடுத்தல். அதேவேளை இந்தியாவுடனுன நேரடி சமூக உறவுகளைப் பேணிக் கொள்ளல் என்பனவுமாகும்.

இந்தியாவில் உள்நாட்டுப் பிரச்சினைகளை ஏற்படுத்த வெளிநாட்டுச் சக்திகள் தூபமிடுகின்றன என்று இந்தியா பொதுவாகக் குறிப்பிடுவது பாகிஸ்தான், அமெரிக்கா, சீனு போன்ற நாடுகளையே குறிக்கும். இந்தியாவின் வடகிழக்கு எல்லைப் புறத்திலிருக்கும் மீசு நாகலாண்ட் போன்ற பகுதிகளில் அரசாங்கத்திற்கு எதிரான கிளர்ச்சிகளைத் தூண்டி விடுவதில் சீனுவிற்குப் பங்கு உண்டென்று பொதுவாக இந்தியா கருதுகின்றதென விளங்க முடிகின்றது. மேலும் தற்பொழுது நிகழும் பஞ்சாப் பிரச்சினை சம்பந்தமாக வெளிநாடுகளின்

தலையீடு உண்டென்று பிரதமர் இந்திரா கூறி வருகின்றார். Newsweek சஞ்சிகைக்கு (யூலை 2, 1984) அளித்த பேட்டியில் "Elements abroad" என்றும் கடந்த காலத்தில் Foreign interference என்று உதாரணமாகப் பாகிஸ்தானைக் கூறியும் "Some intelligence agencies." " என்று பொதுவாகக் கூறியுமுள்ளார்.(33) இப்பேட்டியை உன்னிப்பாக அவதானிக்கும் போது பாகிஸ்தானையும் அமெரிக்காவையுமே மறைமுகமாகக் கூறியுள்ளாரென்று கருத இடமுண்டு.

வளைகுடா நாடுகளில் சோவியத்தின் செல்வாக்கை வளர விடாமல் தடுப்பது அமெரிக்காவின் கொள்கையாகும். ஆப்கானிஸ்தானில் சோவியத் இராணுவம் நிலை கொண்டிருப்பது வளைகுடா நாடுகள் பொறுத்தும் சோவியத்தின் செல்வாக்கு விரிவடைவது சாத்தியமாகும். இந்த வகையில் வளைகுடா நாடுகளில் சோவியத்தின் செல்வாக்கு வளர விடாமல் தடுப்பதற்காகவும், ஆப்கானிஸ்தான் பிரச்சினையின் பொருட்டும், பாகிஸ்தானுக்கு அமெரிக்கா பெருமளவு உதவிகளைச் செய்து வருகின்றது. அமெரிக்கா பாகிஸ்தானுக்குத் தற்பொழுது ஆயுத உதவி செய்வது வளைகுடா நோக்கு நிலையையும், ஆப்கானிஸ்தான் பிரச்சினையையும் மையமாகக் கொண்டு செய்து வருவதாகும். இதில் தென்னாசிய நோக்கு நிலை இரண்டாம் பட்சமானது. எந்த வகையில் பார்த்தாலும் இது இந்தியாவிற்குப் பாதகமானதே. எனவே இந்தியா நேரடியாகத் தன்னைச் சார்ந்த பிரச்சினைகளால் மட்டுமன்றி வல்லரசுகளைச் சார்ந்த பிரச்சினைகளாலும், பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு இந்தியாவைச் சூழ்ந்து பல்வேறு வகைகளிலும் பிரச்சினைகள் எழுந்த போதிலும் இந்தியாவிற்குத் தென் புறத்திலிருந்து பிரச்சினைகள் எழவில்லை. இந்தியாவிற்குத் தெற்கே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை அமைந்துள்ளது. இலங்கையுடன் குறிப்பாக 1980 வரை இந்தியாவிற்குப் பொதுவாக நல்லுறவே இருந்து வந்தது. ஆனால் 1980 களின் ஆரம்பத்திலிருந்து இவ்வுறவில் முரண்பாடுகள் வளரத் தொடங்கியுள்ளன. இவ்விவகாரத்தை அடிப்படையிலிருந்து ஆராய வேண்டும். இந்து சமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ள இலங்கை இந்தியாவிற்குத் தெற்கே இந்தியா பொறுத்தும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. இந்தியாவின்

மேற்குப் பக்கத்தை நோக்கியும், கிழக்குப் பக்கத்தை நோக்கியும் விரிந்து செல்லக் கூடிய வகையில் இந்தியாவின் தென் முனையில் இலங்கை அமைந்திருக்கின்றது. எனவே இலங்கையின் அமைவிடம் உடனடியாகத் தென் புறத்தே பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதும் மேலும் கிழக்கு, மேற்குப் புறத்தே விரிந்து செல்லக் கூடியதுமாகும். இதனால் இந்தியாவின் கவனத்தை ஈர்க்கும் ஒரு பகுதியாக இலங்கை அமைந்துள்ளது. இந்தியாவைப் பாது காப்பதன் அவசியத்தின் பொருட்டு இலங்கை, நேப்பாளம், சிக்கிம், புட்டான் போன்ற நாடுகள் இந்தியாவுடன் அரசியல் ரீதியாக இணைக்கப்பட வேண்டுமென்ற அபிப்பிராயம் உத்தியோகபூர்வமற்ற முறையில் இந்தியாவின் முக்கிய மட்டங்களில் இருந்துள்ளதென எஸ். யு.கொடிகார (S.U. Kodikara ) என்பவர் 1965ம் ஆண்டு குறிப்பிட்டிருக் கிறார்.

இந்தியா சுதந்திரமடையும் போது இந்தியாவைச் சூழ்ந்திருந்த சிறிய அரசுகள் காஉஷ்மீர், சிக்கிம், புட்டான், நேப்பாளம், இலங்கை என்பனவாகும். இவற்றில் காஉஷ்மீரின் 2/3 பகுதி இந்தியாவுடன் இணைக்கப்பட்டு விட்டது. சிக்கிம் இன்று இந்தியாவின் ஒரு மாநிலமாக உள்ளது. புட்டான் இந்தியாவின் பாதுகாப்பு நாடாகவுள்ளது. நேப்பாளம் 1950ம் ஆண்டிலிருந்து இந்தியாவின் செல்வாக்கிற்கு உட்பட்டு வருகின்றது. நேப்பாளம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வெளிநாட்டு விவகாரம் பொறுத்து ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டிற்குள் பெரிதும் உட்பட்டிருந்த நாடு. இந்தியா சுதந்திரமடைந்த பின்பு 1950ல் நேப்பாளத்தில் ஏற்பட்ட உள்நாட்டுப் பிரச்சினையின் நிமித்தம் அதனைத் தீர்த்து வைக்க இந்தியா தலையிடத் தொடங்கியது. 1952ம் ஆண்டு ஜனவரி மாதம் இடதுசாரிகள் ஆட்சியைக் கைப்பற்ற ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் நேப்பாளத்தில் ஈடுபட்ட போது ஆட்சியிலிருந்த அரசாங்கத்திற்கு இந்தியா ஆதரவளித்தது. இடதுசாரிகள் தோற்கடிக்கப்பட்டனர். முக்கிய தலைவர்கள் (K.I. Singh உட்பட ) தீபெத்திற்குத் தப்பி ஓடினர். நேப்பாள அரசு Singh ஐக் கையளிக்கும் படி சீன அரசைக் கேட்டுக் கொண்ட போதிலும் 1955ம் ஆண்டு வரை அவ்வாறு நிகழவில்லை. இந்திய நேப்பாள உறவு மேலும் வலுவடைந்து வந்தது. 1959ம் ஆண்டு தீபெத்தியப் பிரச்சினையைத் தொடர்ந்து இந்திய இராணுவம் நேப்பாளத்தின் வட எல்லைப் புறத்தைக் காவல் காப்பதில் ஈடுபட்டது. இவ்வாறு நேப்பாளம் படிப்படியாக இந்தியாவின் செல்வாக்கிற்கு உட்பட்டுக் காணப்படுகின்றது. இந்தியாவைச் சூழவிருந்த மேற் குறிப்பிட்ட

சிறிய அரசுகளைப் பொறுத்து இலங்கை தான் இந்தியாவிலிருந்து பெரிதும் விலகுண்டு காணப்படுகின்றது. 1980 களின் ஆரம்பத்திலிருந்து தான் இலங்கை சம்பந்தமான கணிசமான அளவு பிரச்சினை இந்தியாவிற்கு ஏற்பட்டுள்ளது. 1980 களின் ஆரம்பத்திலிருந்து தான் இலங்கையோடு சம்பந்தப்பட்டு இந்தியாவின் பாதுகாப்புச் சம்பந்தமான பிரச்சினை எழுந்துள்ளது.

இந்தியா-இலங்கை சம்பந்தமான கடந்த கால உறவுகள் சிலவற்றை நோக்குதல் நல்லது. இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் பொருட்டு இந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டார்கள். இலங்கையும், இந்தியாவும் ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்ற பின்பு இந்தியத் தொழிலாளர் சம்பந்தமான பிரச்சினை இலங்கை - இந்திய அரசாங்கங்களிடையே ஏற்பட்டது. இப்பிரச்சினை இலங்கை - இந்திய உறவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. இலங்கையில் இனக் கலவரங்கள் நிகழும் போது காலா காலம் இலங்கையிலுள்ள இந்தியரின் பாதுகாப்பை இந்தியா வலியுறுத்துவதுண்டு.

1962ம் ஆண்டு சீன இந்திய - சீன எல்லைப் போர் இடம் பெற்றது. இதில் சீனவின் ஆக்கிரமிப்புப் பற்றி இலங்கை தனது தீர்ப்பை வெளியிட்டிருக்கவில்லை என்று ஊர்மிளா பட்னிஸ் குறிப்பிட்டுள்ளார்.[34] இலங்கை இப்பிரச்சினையில் சீனவைக் கண்டிக்காதமை இலங்கை மீது இந்தியாவுக்கு சந்தேகமேற்படுத்த இடமுண்டு. இலங்கை இந்தியா மீது அச்சம் கொண்டிருந்தது என ஊர்மிளா பட்னிஸ் மேலும் விளக்குகின்றார். அதாவது இலங்கைக்கு அருகேயுள்ள பெரிய நாடாகிய இந்தியா இறுதியில் இலங்கையைத் தனக்குள் உள்ளடக்கி விடுமென்று இலங்கையர்கள் அஞ்சினர் என்று குறிப்பிட்டுள்ளார்.[35] பொதுவாக இலங்கை பற்றிய சந்தேகம் இந்தியாவிடமும், இந்தியா பற்றிய அச்சம் இலங்கையிடமும் 1960 களின் ஆரம்பத்தில் வெளிப்பட்டுள்ளன என்பது தெரிகின்றது. ஆயினும் இது இலங்கை இந்திய உறவில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. 1964 ஒக்ரோபர் மாதம் இந்தியத் தொழிலாளர் சம்பந்தமான ஒப்பந்தம் சினேக பூர்வமான முறையில் நிகழ்ந்தது.

1971 எப்ரலில் இலங்கையில் ஜனதா விமுக்தி பெரமுன ( J.V.P ) ஆயுதம் தாங்கிய கிளர்ச்சியில் ஈடுபட்டது. இவர்கள் இடதுசாரிக் கொள்கை உடையவர்கள். இக்கிளர்ச்சியை அடக்குவதற்கு இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் படி இந்தியா இலங்கைக்குப் படை உதவி வழங்கியது. ( இந்தியப் படை வந்திருந்த போதிலும் அதனைப் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படவில்லை) இந்திய எதிர்ப்புக் கொள்கையைக் கொண்ட ஒரு ஸ்தாபனம் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இந்தியா படை உதவி வழங்கியமைக்கு ஓர் அடிப்படை நோக்கமிருந்தது. அதாவது இடது சாரிகளிடம் அதிலும் குறிப்பாக இந்திய எதிர்ப்பு வாதத்தையுடைய இடது சாரிகளிடம் இலங்கையின் ஆட்சியதிகாரம் வீழ்வது இந்தியாவிற்குப் பாதகமானது. எனவே தான் இந்தியா படை உதவி செய்தது. இலங்கையால் இந்தியாவிற்குப் பாதகமில்லை எனும் நிலை வரை இலங்கை பொறுத்து இந்தியா சுமுகமான உறவுகளைக் கைக்கொண்டுள்ளது. ஆனால் இலங்கையில் இந்தியாவிற்குப் பாதகமான நிலைமைகள் உருவாவதை இந்தியா ஒரு போதும் அனுமதியாது என்பது தெரிகிறது. இது இந்தியாவின் பாதுகாப்புப் பற்றிய பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டது. 1971ம் ஆண்டுக் கிளர்ச்சி தோல்வியில் முடிந்தது. இலங்கை - இந்திய உறவில் சுமுக நிலை தொடர்ந்து நிலவியது.

1977ம் ஆண்டு மே மாதம் ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்ததும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றமேற்பட்டது. ஐ.தே.கட்சி ( U.N.P ) திறந்த பொருளாதாரக் கொள்கையையும், மேற்கத்தைய நாடுகள் சார்ந்த வெளிநாட்டுக் கொள்கையையும் கடைப்பிடிக்கத் தொடங்கியது. 1977 மார்ச்சில் இந்தியாவிலும் ஆட்சி மாற்றமேற்பட்டது. மொரார்ஜி தேசாய் தலைமையில் ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்தது. ஜனதாக் கட்சியும் தீவிர வலது சாரிக் கொள்கையுடைய ஒரு கட்சியாகும். எனவே அடிப்படையில் ஜனதாக் கட்சிக்கும், UNP க்குமிடையில் ஒத்த தன்மைகள் காணப்பட்டமையாலும் இந்தியாவிற்குப் பாதகமேற்படக் கூடிய அளவுக்கு மேற்கத்தைய செல்வாக்கு ஒரிரு ஆண்டு காலத்துள் (1980 வரை) வளர்ந்திருக்காததாலும், இக்காலகட்டத்தில் இலங்கை இந்திய உறவு நல்ல நிலையில் இருந்தது. 1977ம் ஆண்டு இலங்கையின் சுதந்திர தினக் கொண்டாட்டத்திற்கு இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் பிரதம விருந்தினராக வரவழைக்கப்பட்டார். பரஸ்பரம் இரு தேசங்களினதும் நல்லுறவுகள் இதில் வெளிப்படுத்தப்பட்டன.

1979ம் ஆண்டு ஜூலை இந்தியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இந்திரா காந்தி பிரதமரானார். இலங்கையில் மேற்கத்தைய செல்வாக்குப் படிப்படியாக வளர்ந்து வந்து கொண்டிருந்தது. இலங்கை அமெரிக்கா சார்ந்த கொள்கையில் பெருமளவு அக்கறை காட்டி வந்தது. இலங்கையின் உறவு சம்பந்தமாக இந்தியா பக்கம் சந்தேகம் வளர்ந்து வந்தது. இலங்கையில் தனிநாட்டுக் கோரிக்கை மேலும் மேலும் கூர்மையடைந்து வந்தது. 1983ம் ஆண்டு யூலை மாதம் இலங்கையின் வரலாற்றிலேயே மிகப் பெரிய இனக் கலவரம் ஏற்பட்டது. பல்லாயிரக் கணக்கான தமிழர் ( இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் ) உடமைகளை இழந்து அகதிகளாயினர். ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். 30000-40000 க்கு இடைப்பட்ட தொகையினர் இந்தியாவில் அகதிகளாய் தஞ்சம் புகுந்துள்ளனர். இலங்கையிலுள்ள இந்திய வம்சா வளியினரின் பாது காப்பு, இந்தியாவின் தென்னகத்தில் இலங்கைப் பிரச்சினையில் தலையிடுமாறு மத்திய அர சாங்கத்திற்கு எதிராக நிகழ்ந்த போராட்டங்கள், இந்தியாவில் இலங்கை அகதிகள் போன்ற காரணங்களைக் காட்டி இலங்கைப் பிரச்சினையில் இந்தியா நேரடியாகத் தன்னை ஈடுபடுத்தியுள்ளது. இப்பிரச்சினையை இந்தியா அணுகும் போது தமிழர்களின் பிரச்சினை யையிட்டு அக்கறை காட்டுவதை விட இலங்கையில் வெளிநாட்டுச் சக்திகளின் வருகை (அமெரிக்கா) சம்பந்தமான விடயங்களையிட்டே அதிக அக்கறை காட்டியுள்ளது. இலங்கை அரசாங்கத்துடன் இந்தியா நடாத்திய பேச்சு வார்த்தையின் போதெல்லாம் வெளிநாட்டுச் சக்திகள் பற்றிய விடயம் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது.(36) இந்தியா வின் நிலை இவ்வாறிருக்கும் அதேவேளை இலங்கை அரசாங்கம் இந்தியா பற்றிக் குறிப்பிடு கையில் இலங்கையில் பிரிவினை கோரும் தமிழ் 'பயங்கரவாதிகளுக்கு' இந்தியா உதரவளிக் கிறதென்றும், ' தமிழ்ப் பயங்கரவாதிகள்' இந்தியாவின் தென்னகத்தில் இராணுவப் பயிற்சி பெற்று வருகிறார்கள் என்றும் இந்தியா மீது குற்றம் சாட்டி வருகின்றது.(37) பொதுவாக இலங்கை இந்திய உறவில் பெரும் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

1983 ஜூலை கலவரத்தைத் தொடர்ந்து இலங்கை அமெரிக்காவுடனும், அமெரி க்கா சார்ந்த நாடுகளுடனும் தனது உறவை வளர்க்கப் பெரிதும் முற்பட்டுள்ளது. ஆசியா வில் அமெரிக்காவிற்கு சார்பான நாடுகளாகிய சீனு, உப்பான், தென் கொரியா, இந் தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுடன்

இலங்கை தனது உறவினை வளர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. ஜெயவர்த்தன மேற்கூறிய நாடுகளுக்கு விசேஷ விஜயத்தை மேற்கொண்டு சென்றமையும், ஜனாதிபதி ஜயவர்த்தன சீன, ஜப்பான், தென் கொரியா போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்தமையும் இந்தியா பொறுத்து இலங்கை மீதான சந்தேகத்தை வளர்த்துள்ளன. இவற்றிற்கு மகுடம் வைத்தாற் போல் ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் அமெரிக்க விஜயம் அமைந்திருந்தது. மேலும் 'பயங்கரவாதத்தை' அடக்குவதற்கு இஸ்ரேலியரின் உதவி பெறப்பட்டுள்ளமை, இஸ்ரேலியர்கள் இலங்கையில் தங்கியிருந்து பயிற்சி அளிக்கின்றமை போன்றன இலங்கை – இந்திய உறவை மேலும் பாதித்துள்ளன. இன்றைய நிலையில் இலங்கைப் பிரச்சினை

1984ம் ஆண்டு யூன் மாதம் இலங்கை ஜனாதிபதி அமெரிக்காவிற்கு விஜயம் செய்ததைத் தொடர்ந்து இலங்கை ஜனாதிபதியை இந்தியாவிற்கு விஜயம் செய்யுமாறு இந்தியா அழைப்பு விடுத்தது. இலங்கை சம்பந்தமான பிரச்சினை தென்னாசியாவிற்குள்ளே தான் தீர்க்கப்பட வேண்டும்: அதனைத் தாண்டி வெளியே போகக் கூடாது என்ற அர்த்தத்திலேயே இலங்கை ஜனாதிபதியை இந்தியா அழைத்தது என்று கருத முடிகின்றது. மேலும் இலங்கை ஜனாதிபதியை விமான நிலையம் சென்று இந்திய ஜனாதிபதியும், இந்தியப் பிரதமரும் வரவேற்றமையானது இலங்கை பொறுத்து அமெரிக்காவை விட இந்தியாவிற்குத் தான் கூடிய அக்கறையும் உரிமையும் உண்டு என்பதைக் காட்டும் வகையில் அமைந்ததெனக் குறிப்பிடலாம். எவ்வாறாயினும் இலங்கை ஜனாதிபதியை வரவழைத்தமையானது அரசியற் தந்திரோபாய நடவடிக்கை என்பதும் இலங்கை மீது இந்தியாவிற்குள்ள சம்பந்தத்தை வெளிக்காட்டும் ஒரு நடவடிக்கை என்பதும் தெளிவாகின்றது.

இலங்கை ஜனாதிபதியின் அமெரிக்க விஜயத்தைத் தொடர்ந்து அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் றொபேட் மக்பலன் வெளியிட்ட கருத்து இங்கு கவனிக்கத்தக்கது. "ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் இலங்கையில் நிலவும் பயங்கரவாதப் பிரச்சினையை மிக ஆழமாகக் கவனத்தில் எடுத்துக் கொள்கின்றது. இந்த வகையில் சாத்தியமான

சகல வழிகளிலும் இலங்கை அரசுக்கு அமெரிக்க அரசாங்கம் உதவி செய்யும். பயங்கர வாதத்தை ஒழிப்பதற்கான இலங்கை அரசின் சகல முயற்சிகளுக்கும் அமெரிக்கா பூரண ஆதரவளிக்கும் "(38) இவ்வறிவிப்பானது இலங்கை பொறுத்து இந்தியாவிற்கு மேலும் மனக் கசப்பை வளர்க்கும் என்பதிற் சந்தேகமில்லை.

இலங்கையிற் ' பயங்கரவாதிகளை ஒழிப்பதற்கென்று இஸ்ரேலின் உதவியை இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது. இஸ்ரேலிய உளவறியும் ஸ்தாபனத்திலிருந்து ( Mossad ) டேவிட் மாரானி ( David Maharani ) தலைமையில் ஒரு குழு இலங்கைக்கு வந்துள்ளது. இங்கிலாந்திலுள்ள ( S.A.S ) எஸ்.ஏ.எஸ் எனும் கூலிப்படை ஸ்தாபனத்திலிருந்து இலங்கைக்குக் கூலிப்படையினர் தருவிக்கப்பட்டுள்ளதாகவும் இக்கூலிப்படையும், மொசாட்டும் சேர்ந்து ஒன்றாக இயங்குவுள்ளதாகவும் The Hindu (Madras) பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது.(39) இவ்வாறு இலங்கையில் அன்னிய இராணுவத்தினர் தங்கியிருப்பது இந்தியாவிற்கான ஓர் அச்சுறுத்தலாகவே இந்தியா கருதும். மேலும் சீன விமானப் படைத் தளபதி 1984 யூலை மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டமையானதும் ( சீனாவின் ஓர் தளபதி இலங்கைக்கு விஜயம் செய்வது இதுவே முதற் தடவை ) இந்தியாவிற்கு சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது எனலாம்.

இலங்கை பொறுத்து அமெரிக்காவினதும், சீனாவினதும் பிரதான கொள்கை என்னவெனில் இலங்கையை இந்தியாவின் பிடிக்குள் அகப்பட்டு விடாமல் தடுப்பதென்பதேயாகும். அதேவேளை இந்தியாவிற்கு எதிராக அமெரிக்க/சீன சார்பு நாடாக இருக்க வேண்டுமென அவை கருதுகின்றன. அமெரிக்காவினதும், சீனாவினதும் மூல உபாயத்தின் பின்னணி என்னவெனில் இந்தியாவிற்கு தெற்கேயுள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடாகிய இலங்கை இந்தியாவின் கைக்குள் அகப்பட்டு விட்டால் இந்தியாவிற்குத் தென் திசையால் உள்ள பாதுகாப்புப் பற்றிய பிரச்சினை இந்தியாவிற்குத் தீர்ந்து விடும். அத்துடன் இந்தியாவின் பலமும் அதிகரிக்கும். எனவே இலங்கை அமெரிக்காவின் செல்வாக்கிற்கு உட்படாது விட்டாலும் இந்தியாவின் பிடிக்குள் அகப்படாமற் தடுப்பதே அமெரிக்காவின் பிரதான நோக்கமாகும். இந்த வகையில் இந்தியாவின் பிடிக்குள் அகப்பட்டு விடாமல்

இலங்கையைத் தடுப்பதே சீனவின் நோக்கமுமாகும். இலங்கை பற்றிய விவசாரங்களில் அமெரிக்காவிற்கும், சீனவிற்குமிடையில் வேறு சில வேறுபாடுகள் இருக்கின்ற போதிலும் இலங்கையை இந்தியாவின் ஒரு பகுதியாக விடாமற் தடுப்பதில் இரு நாடுகளும் ஒரே முடிவைக் கொண்டுள்ளன. இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் பிரச்சினை இந்தியாவிற்கும் பெரும் வாய்ப்பாகவுள்ளது என்ற தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்க சீன அரசுகள் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டுள்ளன. எனவே இங்கு இவ்வரசுகளின் தமிழ் மக்கள் பிரச்சினைக்கு எதிரான தீர்மானமென்பது இந்தியாவிற்கு எதிரான தீர்மானம் என்ற அடிப்படையைக் கொண்டது. பொதுவாக அமெரிக்கா, சீன, இந்தியா ஆகிய நாடுகள் இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினையை இலங்கையின் வட்டத்துக்குள் வைத்துப் பார்க்காமல் தென்னாசியப் பிராந்தியம் சம்பந்தமான ஒரு பிரச்சினை என்றே பார்வையிடுகின்றன. தென்னாசியப் பிராந்தியம் என்று இதனை நோக்கும் போது சர்வதேச அம்சங்கள் இதில் வெளிப்படுகின்றன. பொதுவாகக் கூறுவதாயின் இலங்கைப் பிரச்சினையை இந்தியா தன்னிலிருந்து வேறுபட்ட இன்னொரு நாட்டின் பிரச்சினை என்று அணுகவில்லை. மாறாக தனது உள்வீட்டுப் பிரச்சினை என்றவாறே இந்தியா கருதுகின்றது. எனவே, தனது கை கடந்த ஒரு பிரச்சினையாக இலங்கைப் பிரச்சினை போவதை இந்தியா ஒரு போதும் அனுமதியாது. இந்தியாவின் வடகிழக்கு எல்லையிலமைந்த சிக்கிம், பூட்டான் போன்ற அரசுகளுடன் இந்தியா கடைப்பிடித்த கொள்கை ( இன்று சிக்கிம் இந்தியாவின் ஒரு மாநிலம், பூட்டான் இந்தியாவின் பாதுகாப்பிற்குட்பட்ட அரசு ) இங்கு நினைவு கூரத்தக்கது. இலங்கை இந்தியாவின் அடிப்படைப் பாதுகாப்பு மூலோபாயத்தோடு சம்பந்தப்பட்ட ஒரு நாடாகும்.

தற்போது நிலவும் இந்திய வெளியுறவுக் கொள்கையின் மூலோபாயத்தை இங்கு நோக்க வேண்டும். இந்திய உப கண்டத்தின் மீதான வெளிநாட்டுத் தலையீடுகளைத் தடுத்தல், தென்னாசியாவிலும், இந்து சமுத்திரத்திலும் ஸ்திரப்பாட்டை உருவாக்குதல் என்பனவே வெளியுறவுக் கொள்கையின் மைய ஸ்தானமென அசோக் கபூர் (Ashok Kapur) என்பவர் 1972ம் ஆண்டு குறிப்பிட்டுள்ளார்.(40) இன்றைய நிலையில் இதனைத் தெளிவாகக் குறிப்பிடுவதாயின் இந்திய உபகண்டத்தைப் பாதுகாத்தல், தென்னாசியாவில், ஸ்திரப்பாட்டை ஏற்படுத்துதல், இந்து சமுத்திரத்தைச் சமாதானப் பிராந்தியமாக்குதல் ஆகிய மூன்றும்

இன்றைய இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் மைய ஸ்தானமாகவுள்ளது. இன்றைய இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையோடு நெருக்கமாகச் சம்பந்தப்படும் பிரதான நாடுகள் பாகிஸ்தான், சீனு, அமெரிக்கா, சோவியத் யூனியன் என்பனவாகும். இந்தியா தனது வெளியுறவுக் கொள்கையின் மைய ஸ்தானத்தைக் கருத்திற் கொண்டு மேற் கூறப்பட்ட நான்கு நாடுகளினதும் நிலைமைக்கும், போக்குக்கும் ஏற்ப இந்நாடுகளுடனை உறவின் அளவை தெரிவு செய்வதே இந்திய வெளியுறவுக் கொள்கையின் நிலைமையாய் உள்ளது: இந்த வகையில் இன்று இந்தியாவின் பிரதான நட்பு நாடாக விளங்குவது சோவியத் யூனியனுகும்.

பிரித்தானிய - இந்தியாவைப் பாதுகாப்பதற்காக இருந்த சூழ்நிலையை விட விடுதலையடைந்த இந்தியா தன்னைப் பாதுகாப்பதற்கான சூழ்நிலை கஉஷ்டமானது. ஏனெனில் பிரித்தானிய - இந்தியாவில் இந்தியாவின் பாகமாக இருந்த பாகிஸ்தான் (வடமேற்கேயும், கிழக்கேயும் ) விடுதலையடையும் போது இந்தியாவிலிருந்து பிரிந்து ஒரு தனி நாடாகி விட்டது. அது போலவே அன்று கேந்திர முக்சியத்துவம் வாய்ந்த இலங்கை பிரித்தானியா கையில் இருந்தது. இந்தியா சுதந்திரம் அடையும் போது இலங்கை இந்தியாவின் ஆதிக்கத்திற்கு உட்படாத ஒரு நாடாக அமைந்தது. எனவே ஒப்பீட்டு ரீதியில் ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் கீழிருந்த இந்தியாவை விட விடுதலையடைந்த இந்தியா தன்னைப் பாதுகாப்பதற்கான சூழ்நிலை இந்த வகையில் கடினமானது. இங்கு ஒரு விடயத்தை அவதானிக்க வேண்டும். அதாவது இந்தியா விடுதலையடையும் போது கொண்டிருந்த நிலப் பரப்பை விட தற்போதுள்ள நிலப்பரப்பு அதிகமானதாகும். (விடுதலையடையும் போது இந்தியாவிற்கு வெளியேயிருந்த சிக்கிம், காஉஷ்மீர் என்பன இன்று இந்தியாவின் பகுதிகளாயுள்ளன.) அத்துடன் இந்தியா விடுதலையடையும் போது இந்தியாவிற்கு அருகே உருவாக்கப்பட்ட பெரிய பாகிஸ்தான் 1971ம் ஆண்டு இரண்டு துண்டுகளாக பிரிந்துள்ளன. விடுதலையடையும் போது இருந்த புவியியற் சூழ்நிலையை விட தற்போது அதனைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் முயற்சிகளில் இந்தியா முன்னேறியுள்ளது.

விடுதலையடைந்த இந்தியா ஆரம்பத்தில் எண்ணியவாறு அதன் வெளிநாட்டுக் கொள்கையின் போக்கு பின்பு அமையவில்லை. இந்திய - பாகிஸ்தானியப் பிரச்சினை ஏகாதிபத்தியம் இப்பிராந்தியத்துள் நுழைய வாய்ப்பைக் கொடுத்தது. மேற்கத்தைய ஏகாதிபத்தியம்

பாகிஸ்தானைத் தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தத் தொடங்கியது. மூன்றும் உலக நாடுகள் இரண்டின் இடையில் மோதல் ஏற்பட்டமை ஏகாதிபத்தியத்திற்கு ஒரு பெரும் வரப் பிரசாதமாய் அமைந்தது. 1962ம் ஆண்டு இந்தியா மீது சீனு மேற்கொண்ட படையெடுப்பு இந்தியாவை விழிப்படைய வைத்தது. இந்தியா ஒரு வல்லரசைச் சார வேண்டிய நிலையை இப்படையெடுப்பு தோற்றுவித்தது. இந்தியா ஒரு வல்லரசின் உதவியைத் தேட முற்பட்டது. 1960ம் ஆண்டு சீனு - சோவியத் யூனியன் ஆகிய இரு சோஷலிச நாடுகளுக்கிடையேயான உறவு முறிவடைந்தது. இந்நிலையில் சோவியத் யூனியனுக்குப் புவியியல் ரீதியாகவும், சர்வதேச தேவைகளின் அடிப்படையிலும் ஆசிய மண்ணில் ஒரு மிகப் பெரிய நண்பன் தேவைப்பட்டது. அமெரிக்காவுடன் இந்தியா ஆரம்பத்திலிருந்தே முக்கிய முரண்பாடுகளைக் கொண்டிருந்தமை, புவியியல் ரீதியாக இந்தியாவிலிருந்து அமெரிக்கா மிகுந்த தூரத்தில் இருந்தமை போன்ற காரணிகளின் மத்தியில் இந்திய - சோவியத் இரு தரப்புத் தேவைகள் கூர்மையடைய இந்திய சோவியத் உறவு வலுவான உறவாக உருவாகியது. இந்திய சோவியத் உறவுக்கு அடிப்படையில் சோஷலிச இலட்சியம் இருக்கின்றதென்று சொல்வதற்கில்லை. தென்னாசியாவில் அமெரிக்காவைத் தோற்கடித்த இந்தியாவுக்கு சோவியத் உறவு உதவியாயுள்ளது. 1971ம் ஆண்டு பங்களாதேஷ் பிரச்சினையில் இந்தியா தன்னை ஒரு வலுவுள்ள அரசு என்று நிரூபித்தமையைத் தொடர்ந்து சீனு அமெரிக்க உதவியை நாடியது. சீன - அமெரிக்க உறவுக்கு அடிப்படையில் சோஷலிச இலட்சியம் என்பதில்லை. 1962ம் ஆண்டு இந்திய - சீன எல்லைப்போர் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் போக்கில் ஒரு முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியதென்று குறிப்பிடலாம். 1962ம் ஆண்டு இந்தியா மீது சீனு படையெடுத்த போது இந்தியா இராணுவம் மிகப் பலவீனமாக இருந்தது. அதனைப் பற்றி அப்போது இந்திய உள்துறை அமைச்சராக இருந்த லால் ப தூர் சாஸ்திரி தெரிவித்த கருத்து முன்பு குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போது சீனுவை விட இந்திய இராணுவம் பலம் பொருந்தியதாயுள்ளது. 3ம் உலக நாடுகளுள் இந்தியாவின் இராணுவம் தற்பொழுது முதிர்ச்சியும், புத்திசாலித்தனமும் மிக்க ஒரு பலம் பொருந்திய இராணுவமாகும்[41] என்று சொலமட் அலி (Solamat Ali) 1984ம் ஆண்டு மே மாதம் குறிப்பிட்ட கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது. பொதுவாக தென்னாசியப் பிராந்தியத்தில் தன்னை ஒரு பிராந்திய வல்லரசாக உறுதிப்படுத்துவதே இன்று இந்தியாவின் பிரதான நோக்கமாகும். தென்னாசியப் பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கு

அந்நிய இராணுவத் தளங்கள் அமைக்கப்படுவதோ அன்றி அன்னிய இராணுவம் வருவதோ அன்றி வேறு வகைகளில் அந்நிய தலையீடுகள் ஏற்படுவதோ இந்தியாவிற்கான ஓர் அச்சுறுத்தலாகவே இந்தியா கருதுகின்றது. இதற்கு முக்கியத்துவம் கொடுத்தே இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை அமைந்து செல்லும் என்று துணிந்து கூறலாம்.